விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 144 வள்ளுவர் ஆண்டு 2056 சித்திரை 29 திங்கட்கிழமை (12.05.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

உங்கள் ஆரோக்கியம் எமது நோக்கம்
Royal றோயல் சுத்தமான தேன்
ஆய்வுகூடத்தில் தரம் பரிசோதிக்கப்பட்டு பொதியிடப்படுகிறது.
Marketed By:- (C-2952)
சிவா நறுமணப் பூங்கா®
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே : 021 2222 567

## தமிழின அழிப்பு நினைவுத் தூபி

### கனடா பிரம்டன் நகரில் திறப்பு




(பிரம்டன்)

இலங்கையில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட தமிழின அழிப்பால் உயிரிழந்தவர்களின் நினைவாக அமைக்கப்பட்ட தூபி கனடா பிரம்டன் நகரில் திறந்து வைக்கப்பட்டது.

(15ஆம் பக்கம் பார்க்க)

## 29 வயது இளம் குடும்பஸ்தர் சுழிபுரத்தில் மரணம்

### திருமணம் நடைபெற்று ஒரு மாதத்தில் துயரம்

(யாழ்ப்பாணம்)

சுழிபுரத்தில் திருமணம் நடைபெற்று ஒரு மாதமேயான

15ஆம் பக்கம் பார்க்க

## முள்ளிவாய்க்கால் வாரம் உணர்வுபூர்வமாக ஆரம்பம்



### கஞ்சி வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது

(யாழ்ப்பாணம்)

முள்ளிவாய்க்கால் வாரம்

15ஆம் பக்கம் பார்க்க

## வாந்தி எடுத்த குடும்பஸ்தர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீர்வேலியில் வாந்தி எடுத்த குடும்பஸ்தர் ஒருவர் நேற்று மரணமடைந்துள்ளார்.

இதில் கோப்பாய் வைத்தியசாலையில் சிற்றூழியராகப்

02ஆம் பக்கம் பார்க்க

## ஓமந்தையில் விபத்து

### ஒருவர் பலி

(வவுனியா)

ஓமந்தைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வவுனியா - யாழ்ப்பாணம் வீதியில், கப் வண்டி ஒன்று மோட்டார் சைக்கிள் மீது மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்

15ஆம் பக்கம் பார்க்க

# தமிழின அழிப்பை மறுத்தால் கனடாவில் இடமில்லை

## பிரம்டன் மேயர் பட்ரிக் பிரவுண்



(பிரம்டன்)

இலங்கையில் தமிழின அழிப்பு இடம்பெறவில்லை எனக் கூறுபவர்களுக்கு கனடாவில் இடமில்லை. மீண்டும் கொழும்புக்கே செல்லுங்கள் என கனடாவின் பிரம்டன் மேயர் பட்ரிக் பிரவுண் தெரிவித்துள்ளார். (02ஆம் பக்கம் பார்க்க)

## ரயில் மோதியதில் குடும்பஸ்தர் மரணம்

### பளையில் சம்பவம்

(பளை)

பளையில் புகையிரதம் மோதியதில் குடும்பஸ்தர் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

நேற்றுக் காலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் அருளானந்தம்

15ஆம் பக்கம் பார்க்க

## கொத்மலையில் 350 அடி பள்ளத்தில் பேருந்து வீழ்ந்து விபத்து : 22 பேர் பலி



(நுவரெலியா)

நுவரெலியா - கண்டி பிரதான வீதியின் கொத்மலைப் பகுதியில் 350 அடி பள்ளத்தில் பேருந்து ஒன்று வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் பேருந்து சாரதி உட்பட 22 பேர் உயிரிழந்துள்ளனர்.

நுவரெலியா - கண்டி

02ஆம் பக்கம் பார்க்க

## இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆட்சியமைக்க ஒத்துழைப்பு

### சித்தார்த்தன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி சபைகளில் இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆட்சியமைப்பதற்கு, ஒத்துழைப்பு வழங்க எதிர்பார்த்துள்ளதாகத் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் தலைவர், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

அதேபோன்று தமிழரசுக்

15ஆம் பக்கம் பார்க்க

## மாகாண சபை தேர்தலை அநுர அரசு நடத்தாது

### மகிந்த தெரிவிப்பு

10ஆம் பக்கம் பார்க்க

## கொத்மலை விபத்தில் தன் உயிரைக் கொடுத்து குழந்தையைக் காப்பாற்றிய தாய்




(நுவரெலியா)

கொத்மலையில் நேற்று இடம்பெற்ற பேருந்து விபத்தில் தாய் ஒருவர் தனது உயிரைக் கொடுத்து குழந்தையைக் காப்பாற்றிய நெகிழ்ச்சிச் சம்பவம் தொடர்

02ஆம் பக்கம் பார்க்க

## கொத்மலை பேருந்து விபத்து
# உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ஒரு மில்லியன் நிதியுதவி

(கொழும்பு)

கொத்மலை - கெரண்டி எல்ல பகுதியில் நேற்று (11) காலை இடம்பெற்ற பேருந்து விபத்தில் உயிரிழந்த ஒவ்வொருவர் சார்பாகவும் தலா ஒரு மில்லியன் ரூபாய் வழங்குமாறு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, ஜனாதிபதி நிதியத்திற்குப் பணிப்புரை வழங்கியுள்ளார்.

அதன்படி, இறந்தவர்களின் உறவினர்களுக்கு இந்தப் பணத்தை உடனடியாக வழங்க ஜனாதிபதி நிதியம் திட்டமிட்டுள்ளது.

மேலும், இலங்கை போக்குவரத்து சபை மற்றும் காப்புறுதி நிதியம் மூலம் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. (ம-4,7)

# பிரதமர் ஹரிணிக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம்

(கொழும்பு)

பிரதமர் ஹரிணி அமரசூரியவிற்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வருவது குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருவதாக அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிரதமருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட வேண்டுமென எதிர்க்கட்சிகளுக்குள் பேசப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது பிரசார காலம் நிறைவடைந்ததன் பின்னரும் பிரசாரங்களை மேற்கொள்ளுமாறு கட்சி ஆதரவாளர்களை ஹரிணி தூண்டியதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தியுள்ளன.

இதன் அடிப்படையிலேயே பிரதமருக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வரப்பட வேண்டுமென கோரப்பட்டுள்ளது. (ம-4,7)

# மரண அறிவித்தல்

தோற்றம்
16 - 04 - 1967



மறைவு
09 - 05 - 2025

## சங்கரப்பிள்ளை ஸ்ரீஸ்கந்தராஜா

V.C லேன், கொல்லங்கலட்டி, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் இணுவில், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை ஸ்ரீஸ்கந்தராஜா அவர்கள் லண்டனில் கடந்த வெள்ளிக்கிழமை (09.05.2025) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - அன்னலட்சுமி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான வேலும் மயிலும் (ஓய்வு பெற்ற கிராமசேவையாளர்) - மங்களேஸ்வரி தம்பதியரின் மருமகனும் சிவாஜினி (முன்னாள் ஆசிரியர் - யா/இராமநாதன் கல்லூரி, யாழ். மயிலிட்டி கலைமகள் மகா வித்தியாலயம்) அவர்களின் அன்புக் கணவரும் மிகுந்தன் (மாணவன் - யா/கொக்குவில் இ.ஆ.பா) அவர்களின் அன்புத் தந்தையும் செல்வமலர், தவமலர் (U.K), சுகிர்தமலர், சிவராஜா, பத்மராஜா (ஆசிரியர் - யா/மல்லாகம் ம.வி), கிருஷ்ணராஜா (உடுவில் பிரதேச செயலகம்) ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற ஜெயா மற்றும் கிருபாகரன் (U.K), யோகவல்லி (ஆசிரியர் - நடேஷ்வராக் கல்லூரி), கந்ததர்ஷினி (ஆசிரியர் - பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம்), லோகேஸ்வரன், லதாவாணி (ஆசிரியர் - யா/ இராமநாதன் கல்லூரி), சிவலோஜினி (ஆசிரிய ஆலோசகர் - வலிகாமவலயம்), வதனி (ஆசிரியர் - யா/ இராமநாதன் கல்லூரி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஜீவசியாமினி (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் - கல்வி அமைச்சு, வடமாகாணம்), இளங்கோ (பிரதிக் கல்விப் பணிப்பாளர் - தீவக வலயம்), கமலராஜன் (வலயக் கல்விப் பணிப்பாளர் - தென்மராட்சி வலயம்), காலஞ்சென்ற Dr.ரகுபதி (பொது வைத்திய நிபுணர் - தெல்லிப்பழை) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தொடர்பான விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
இணுவில். (4161) ச.கிருஷ்ணராஜா - 077 678 6952

## வாந்தி...

பணி புரியும் நீர்வேலி தெற்கு - பூதர்மட ஒழுங்கை என்ற முகவரியைச் சேர்ந்த குணரத்தினம் குணாதரன் (வயது 41) என்ற 3 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் நேற்று ஞாயிற்றுக்கிழமை (11) வாந்தி எடுத்துள்ளார். இந்நிலையில் உறவினர்கள் அவரை கோப்பாய் வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர். இருப்பினும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

இதயநோய் காரணமாக மரணம் சம்பவித்துள்ளதாக உடற்கூற்று பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது. (ம-4,7)

## குழந்தையை...

பில் சமூகஊடகங்களில் பலரும் பகிர்ந்து வருகின்றனர்.

குறித்த பேருந்தில் தாய், தந்தை, 9 மாதக் கைக்குழந்தை உட்பட 3 பிள்ளைகள் பயணித்துள்ளனர்.

பள்ளத்தில் கவிழ்ந்த பேருந்தின் அடியில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கும் நிலையிலும் கூட அந்த தாய் தனது வலியை கூட பொருட்படுத்தாமல் தனது குழந்தையைக் கட்டி அணைத்தபடி கையில் தாங்கிக் கொண்டு குழந்தையை காப்பாற்றத் துடிக்கும், தவிக்கும் காணொளி அன்னையர் தினமான நேற்று நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. விபத்தில் தாய், தந்தை இருவரும் உயிரிழந்த நிலையில் 9 மாதக் குழந்தை உட்பட மூன்று பிள்ளைகளும் காப்பாற்றப்பட்டுள்ளனர். (ம-4,7)

## கொத்மலையில்...

பிரதான வீதியின், கொத்மலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இறம்பொடை - கெரண்டி எல்ல பகுதியில் நேற்று அதிகாலை 4.30 மணியளவில் இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

கதிர்காமத்திலிருந்து நுவரெலியா வழியாக குருணாகல் நோக்கிப் பயணித்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்தொன்றே இவ்வாறு விபத்துக்குள்ளானது.

விபத்தில் உயிரிழந்தவர்களில் 5 பெண்கள் மற்றும் 12 ஆண்கள் உள்ளடங்குவதாகவும் பேருந்து சாரதியும் விபத்தில் உயிரிழந்ததாகவும் பேருந்தில் சுமார் 75 பயணிகள் இருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் காயமடைந்தவர்கள் கொத்மலை பொது வைத்தியசாலை, நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலை, கம்பளை மற்றும் நாவலப்பிட்டி ஆகிய பகுதியில் உள்ள வைத்தியசாலைகளிலும் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மேலும், காயமடைந்தவர்களில் பலரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளது.

விபத்து குறித்து விசாரணை நடத்தி வரும் கொத்மலை பொலிஸார் ஓடிக் கொண்டிருந்த பேருந்தில் ஏற்பட்ட திடீர் தொழில்நுட்பக் கோளாறே விபத்துக்குக் காரணமாக இருக்கலாம் என்று சந்தேகிக்கின்றனர். (ம-4,7)

## தமிழின...

கனடாவில் தமிழர் இனவழிப்பு நினைவுத்தூபி திறப்பு விழாவில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், நாங்கள் தமிழர்கள் இனவழிப்பின் அளவை மறக்கக்கூடாது. ஆயிரக்கணக்கான தமிழர்கள் இலங்கை அரசாங்கத்தினால் படுகொலை செய்யப்பட்டார்கள்.

உண்மைக்காகவும் நீதிக்காவும் குரல்கொடுத்த தமிழர்களை இழிவுபடுத்தவும் தாக்கவும் அவர்கள் முயன்றனர்.

இது ஒரு உடல்ரீதியான இனப்படுகொலை மாத்திரமல்ல உலகின் அனைத்து பகுதிகளிலும் உள்ள தமிழர்கள் மீதான தாக்குதல் இது.

இலங்கையில் தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்படவில்லை என தெரிவிப்பவர்களிற்கு பிரம்டனில் இடமில்லை. கனடாவில் இடமில்லை கொழும்பிற்கு திரும்பிச் செல்லுங்கள்.

மேலும், தமிழர் படுகொலை நினைவுதூபி என நகரத்தில் உருவாகியுள்ளமை குறித்து நான் பெருமிதம் அடைகின்றேன் ஆனால் இன்னமும் செய்யவேண்டிய பணிகள் உள்ளன. தமிழர் இனவழிப்பு நினைவுத்தூபியை நிர்மாணிப்பதில் தான் எதிர்கொண்ட சவால்கள் ஏராளம் என்றார். (ம-4,7)

பொருளியற் கல்லூரி
நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
வர்த்தகப் பிரிவு
A/L DAY CLASS
பொருளியல் - R.தர்ஷன்
புதன், வியாழன், வெள்ளி 7-11 AM
கணக்கீடு - R.தர்ஷன்
பிரிவு I திங்கள், செவ்வாய் 8-11 AM
கணக்கீடு - S.திருக்குமரன்
பிரிவு II சனி, ஞாயிறு 8-11 AM
வணிகக்கல்வி - S.பிரதீபன்
புதன், வியாழன், வெள்ளி 6-7 AM
ஞாயிறு 6.30-8.00 AM
ICT - T.சுதர்ஷன்
திங்கள், வெள்ளி 3-5 PM
சனி, ஞாயிறு 7-8 AM
உங்கள் அனுமதிகளை பெற்றுக்கொள்ளவும்
கலைப்பிரிவு A/L DAY CLASS
7.30 - 12 PM வரை யாழ்ப்பாணம், சுன்னாகம், சித்தன்கேணி மூன்று இடத்திலும் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.
(C-2953)
தொடர்புகளுக்கு:
யாழ்.நகர் - 077 220 9651
சுன்னாகம் - 075 916 0417
சித்தன்கேணி - 077 169 2446

Vacancy
Manager, Supervisor, Account clerk, Office Admin, IT manager, Driver, Telephone operator, online part time staffs
(4160)
077 773 3368, 076 098 4532

# மின் கட்டணத்தை உயர்த்தி மக்களை வாட்டாதீர்கள்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

**(கொழும்பு)**

**மின்சாரக் கட்டணத்தை உயர்த்தி மக்களை வாட்டுவதை உடனடியாக நிறுத்துங்கள் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அரசிடம் கோரிக்கை முன்வைத்துள்ளார்.**



ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்ட சஜித் பிரேமதாஸ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

எதிர்வரும் மின்சாரக் கட்டணத் திருத்தத்தில் 25% முதல் 30% வரையானளவில் மின்சாரக் கட்டணத்தை உயர்த்த அரசாங்கம் மேற்கொள்ளும் முயற்சியை உடனடியாக நிறுத்துமாறு நாங்கள் வலியுறுத்துகிறோம்.

தற்போதைய ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் ஆட்சிக்கு வருவதற்கு முன், இலங்கையின் கடன் நிலைத்தன்மை பகுப்பாய்வை (DSA) மறுபரிசீலனை செய்வதாக மக்களுக்கு அளித்த வாக்குறுதியை மறந்து முந்தைய அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் (IMF) மேற்கொண்ட உடன்படிக்கைகளை அப்படியே செயற்படுத்துவதன் விளைவாக இப்படி மின்சாரக் கட்டணத்தை உயர்த்தும் நிலை உருவாகியுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்துடன் ஜூலை மாதம் நடைபெறவுள்ள மீளாய்வுக்கு முன் மின்சாரக் கட்டணத்தை உயர்த்தி நிபந்தனைகளை நிறைவேற்றும் நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது என்பது இப்போது தெளிவாகிறது.

கடந்த ஆண்டு இலாபம் ஈட்டிய இலங்கை மின்சார சபை பெப்ரவரி மாதம் முதல் நட்டமடைந்து வருவதாகவும் அது எண்ணிக்கையில் ரூபாய் 271.1 பில்லியன் அளவிற்கு இருப்பதாகவும் கூறி அன்று மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை கைவிடத் தயாராகிறது என்பது தெளிவாகத் தெரிகிறது.

ரூபாய் 9,000 மின்சாரக் கட்டணத்தை ரூபாய் 6,000 வரையும் ரூபாய் 3,000 மின்சாரக் கட்டணத்தை ரூபாய் 2,000 வரையும் 33% குறைப்பதாக தற்போதைய ஜனாதிபதி தேர்தலுக்கு முன் மக்களுக்கு அளித்த வாக்குறுதியை மறந்து இவ்வாறு நாட்டு மக்களை துன்பத்திற்கு உள்ளாக்குவது ஜனநாயக விரோதச்செயல் என்பதை நாங்கள் வலியுறுத்துகிறோம்.

இதற்கு முன்னரும் தற்போதைய மின்சக்தி அமைச்சர் உட்பட அரசாங்கம் மின்சாரக் கட்டணத்தைக் குறைக்க முடியாது என அறிவித்த போதும் எதிர்க்கட்சியாக நாங்களும் மின்சார நுகர்வோர் அமைப்புகளும் எழுப்பிய குரலுக்குப் பதிலளித்து பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு ஜனவரி மாதத்தில் 20% மின்சாரக் கட்டணத்தைக் குறைத்ததையும் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அதன்படி இம்முறையும் மின்சாரக் கட்டண உயர்வுக்கு எதிராக அனைவரையும் ஒன்றிணைத்து இந்த நாட்டின் மின்சார நுகர்வோரின் உரிமைகளைப் பாதுகாக்க உறுதி பூண்டுள்ளோம் என வலியுறுத்துகிறேன் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4,7)

# கொத்மலை விபத்து ஜனாதிபதி இரங்கல்

(நுவரெலியா)

நுவரெலியா - கண்டி பிரதான வீதியின் கொத்மலை, கெரண்டி எல்ல பகுதியில் நேற்று (11) காலை இடம்பெற்ற பேருந்து விபத்து, தமக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியதாக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

இந்த விபத்துத் தொடர்பில் ஜனாதிபதி இரங்கல் செய்தி ஒன்றை வெளியிட்டு இதனைக் குறிப்பிட்டார்.

நாட்டில் தினமும் அதிகரித்து வரும் வீதி விபத்துகள் குறித்து அரசாங்கம் அதிக கவனம் செலுத்தியுள்ளது.

இதுபோன்ற விபத்துகளைத் தடுப்பதற்கான நிரந்தரத் திட்டத்தை வகுப்பதற்கு அரசாங்கம் தற்போது மும்முரமாகச் செயற்பட்டு வருகிறது.

தற்போதுள்ள சட்டங்களை செயற்படுத்துவதன் மூலமும் சாரதிகளின் மனப்பான்மையை மேம்படுத்துவதன் மூலமும் இவ்வாறான விபத்துகளைக் கணிசமாகக் குறைக்க முடியும் என்று தாம் நம்புவதாக ஜனாதிபதி குறிப்பிட்டார். (ம-4,7)

# கொத்மலை பேருந்து விபத்து விசாரணைகள் ஆரம்பம்

## பொலிஸ் ஊடகப் பிரிவு

(கொழும்பு)

கொத்மலை - கெரண்டி எல்ல பிரதேசத்தில் பேருந்து விபத்து ஏற்பட்டமைக்கான காரணம் என்ன என்பது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளப்படுவதாகப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

விபத்து ஓட்டுநரின் கவனயீனத்தால் ஏற்பட்டதா? இயந்திரக் கோளாறு காரணமாக ஏற்பட்டதா? என்ற கோணத்தில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த விபத்துத் தொடர்பான விசாரணைகள் கொத்மலைப் பொலிஸாரால் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவித்து பொலிஸ் ஊடகப்பிரிவு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

விபத்தால் இது வரை 22 பேர் உயிரிழந்தனர்.

மேலும் 35ற்கும் அதிகமானோர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-4,7)


சேவை நலன் பாராட்டும் மணிவிழா வாழ்த்தும்




திருமதி.
ஆன் மேரி ஜெயந்தினி நாகராஜா (ஆசிரியர்)
(SLTS-I) , B.A,Dip.in Edu)

சேவை விபரம்

- மன்/ஆண்டான்குளம் றோ.க.த.க. பாடசாலை (15.03.1990–13.03.1994)
- மன்/பெரியமடு மகா வித்தியாலயம் (14.03.1994–14.03.1997)
- மன்/தேவன்பிட்டி றோ.க.த.க. பாடசாலை (15.03.1997–23.07.2006)
- யா/மருதங்கேணி இ.த.க பாடசாலை (24.07.2006–06.09.2009)
- யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி (07.09.2009–04.11.2011)
- யா/விக்னேஸ்வரா கல்லூரி (05.11.2011–03.01.2019)
- யா/திருஇருதயக் கல்லூரி (04.01.2019–17.06.2019)
- யா/தேவரையாளி இந்துக் கல்லூரி (18.06.2019–11.05.2025)

எமது பாடசாலையில் ஆறு வருடங்கள் ஆசிரியராக கடமையாற்றி 11.05.2025 முதல் ஓய்வு பெற்றுச் செல்லும் ஆசிரியர் அவர்களது ஓய்வு காலம் சிறக்கவும் 2025.05.12 இன்று அகவை தினத்தைக் கொண்டாடும் நன்நாளில் வாழ்த்துவதுடன் இறையாசி பெற்று நீடூழி காலம் வாழவும் வாழ்த்துகின்றோம்.

(C-2946)

Congratulations

வாழ்த்துவோர்- பணியாளர் நலன்புரிச்சங்கம்,
யா/தேவரையாளி இந்துக் கல்லூரி–கரவெட்டி.




மணிவிழா வாழ்த்து

திருமதி. பிரேமலதா பாரதிதாசன்
(B.A, Dip.in.Edu)

யா/பாஷையூர் சென்அன்ரனிஸ் றோ.க.மகளிர் வித்தியாலயத்தில் ஆசிரியராக கடமையாற்றி இன்று 12.05.2025 ஓய்வு பெறும்
திருமதி.பிரேமலதா பாரதிதாசன்
அவர்களது சேவையைப் பாராட்டுவதுடன் ஓய்வு சீரும் சிறப்புமாக அமைய வாழ்த்துகின்றோம்.

சேவைக்கால விபரம்

- யா/திருக்குடும்பக் கன்னியர்மடம் (ஆங்.பாடசாலை) (05.09.1994-14.02.2001)
- யா/ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி (15.02.2001-31.12.2003)
- யா/சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலை (01.01.2004-18.02.2015)
- யா/பாஷையூர் சென். அன்ரனீஸ் றோ.க.ம.வித் (19.02.2015-11.05.2025)

வாழ்த்துவோர்...
ஆசிரியர் நலன்புரி சங்கம்
யா/பாஷையூர் சென். அன்ரனிஸ்
றோ.க.மகளிர் வித்தியாலயம், பாஷையூர்

(4136)

# தாயகம் சென்ற வீரர்களை திரும்ப அழைக்கும் ஐ.பி.எல் அணிகள்




போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்ட தால் வெளிநாட்டுக்குச் சென்ற வீரர்களை ஐ.பி.எல் அணிகள் மீண் டும் இந்தியாவுக்கு வர அழைத்தி ருப்பதாக தகவல் வெளியாகியுள் ளது.

இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையிலான போர்ப் பதற்றம் காரணமாக ஐபிஎல் தொடர் தற்கா லிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடை யேயான போர் நேற்று முன்தினம் இரவு முடிவுக்கு வந்ததாக அறிவிக்கப்பட்டதால் ஐபிஎல் நிர் வாகம் போட்டிகள் எங்கு நடத்த வேண்டுமென ஆலோசனை நடை பெற்று வருகிறது.

மீதமுள்ள 16 போட்டிகளை சென்னை, பெங்களூர், ஹைதரா பாத் நகரங்களில் நட த்த திட்டமிட்டுள்ள தாக தகவல்கள் வெளி யாகின.

இந் நிலையில், ஐபிஎல்அணிகள் வெளி நாட்டுக்குச் சென்ற வீரர்கள், பயிற்சியா ளர்களை மீண்டும் இந்தியாவுக்கு வரு மாறு அழைத்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அநேகமாக ஐபிஎல் போட்டிகள் மே.15ஆம் திகதி முதல் மீண்டும் தொடங்குமென எதிர்பார்க்கப்படு கிறது. இந்நிலையில் பட் கம்மின்ஸ், டிராவிஸ் ஹெட், நாதன் எல்லீஸ் மீண்டும் இந்தியா வருவதில் உறுதியாக இல்லை என தகவல் வெளியாகியுள்ளது.

ஏனெனில், உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்கு ஆஸி. அணி தயாராகி வருகிறது.

மேலும் ஐபிஎல் போட்டியில் சன்ரைசர்ஸ், சிஎஸ்கே அணிகள் பிளே ஆஃப் இற்கு தேர்வாகவில்லை. அதனால் அதில் இருக்கும் வீரர்கள் இந்தியாவுக்கு வருவதில் சந்தேகம் எனக் கூறப்பட்டுள்ளது. (6-8)

# கடற்கரை கபடிப்போட்டியில் யாழ்.மாவட்ட அணிகள் சம்பியன்





வடமாகாண மாவட்ட செயலக அணிகளுக்கு இடையிலான ஆண் கள் பெண்களிற்கான கடற்கரை கபடிப் போட்டியில் இரு பிரிவுகளிலும் யாழ்.மாவட்ட அணிகள் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண் டன.

வடமாகாண விளையாட்டு திணைக்களத்தினால் நடத்தப்படும் மாவட்ட அணிகளுக்கு இடையி லான கடற்கரை கபடி போட்டிகள் மன்னார் கடற்கரையில் நடை பெற்றது.

இதில் ஆண்களுக்கான இறுதி யாட்டத்தில் யாழ்.மாவட்ட அணியை எதிர்த்து மன்னார் மாவட்ட அணி மோதியது. பரபரப்பான ஆட்டத்தில் யாழ்.மாவட்ட அணி 56:48 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

பெண்களுக்கான இறுதியாட்டத் தில் யாழ்.மாவட்ட அணியை எதிர் த்து கிளிநொச்சி மாவட்ட அணி மோதியது. இதில் இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிக்கும் வகை யில் விளையாடிக் கொண்டிருந்த னர்.

இருப்பினும் ஆட்ட நேர முடிவில் யாழ்.மாவட்ட அணி 56:51 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது. (6-8-90)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 550 | 550 | 400 | 500 | 500 |
| உருளைக்கிழங்கு | 220 | 220 | 230 | 210 | 250 |
| பச்சைமிளகாய் | 160 | 150 | 200 | 170 | 200 |
| தக்காளி | 1200 | 1200 | 1200 | 900 | 1000 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 280 | 300 | 250 | 200 |
| கோவா | 550 | 500 | 600 | 400 | 600 |
| கரட் | 850 | 950 | 1200 | 900 | 1200 |
| பூசணி | 180 | 200 | 180 | 170 | 200 |
| புடோல் | 300 | 300 | 200 | 200 | 300 |
| வாழைக்காய் | 100 | 100 | 100 | 60 | 150 |
| சின்ன வெங்காயம் | 300 | 100-300 | 300 | 120-300 | 400 |
| பெரிய வெங்காயம் | 140 | 150 | 180 | 120 | 160 |
| பாகற்காய் | 1200 | 1200 | 1000 | 1500 | 1200 |
| வெண்டக்காய் | 300 | 350 | 200 | 250 | 600 |
| கருணைக் கிழங்கு | 350 | 300 | 250 | 200 | 400 |
| பயற்றங்காய் | 400 | 500 | 600 | 350 | 600 |
| லீக்ஸ் | 300 | 350 | 300 | 250 | 400 |
| பீற்றூட் | 600 | 600 | 600 | 500 | 600 |
| கறிமிளகாய் | 650 | 800 | 600 | 450 | 800 |
| முருங்கைக்காய் | 2500 | 2800 | 2000 | 1800 | 2000 |
| போஞ்சி | 800 | 900 | 1000 | 500 | 1000 |
| கத்தரிதம்புள்ள | 500 | 450 | 350 | -- | 500 |
| கீரை - 1 பிடி | 150 | 80-150 | 150 | 70 | 200 |
| தேசிக்காய் | 350 | 250 | 400 | 350 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 280 | 250 | 120-250 | 200-250 |
| இராசவள்ளி | 600 | 700 | 1000 | 450 | 700 |
| வெங்காயப்பூ | -- | 600 | 600 | -- | 600 |
| முள்ளங்கி | 150 | 200 | 200 | 150 | 400 |
| பொன்னாங்காணி | 80 | 70 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 70 | 100 | 80 | 80 |
| ஈரப்பலா | 100 | -- | 100 | -- | -- |

# ஐ.பி.எல் மீதிப் போட்டிகளை நடத்துவதற்கு இங்கிலாந்து அழைப்பு




இந்தியா - பாகிஸ் தான் இடையே யான போர்ப் பதற்றம் கார ணமாக ஒரு வாரத் திற்கு ஐ.பி.எல். போட்டிகள் நிறுத்தப்பட்டி ருக்கும் நிலை யில், மீதிப்போட்டிகளை தங்கள் நாட்டில் நடத்திக் கொள்ள இங்கிலாந்து கிரிக்கெட் வாரியம் அழைப்பு விடுத்துள்ளது.

பஹல்காம் தாக்குதலைத் தொடர்ந்து இந்தியா- பாகிஸ்தான் இடையே போர்ப் பதற்றம் ஏற் பட்டிருக்கும் நிலையில், இந்தியா வில் நடந்து வந்த ஐ.பி.எல் கிரிக்கெட் போட்டிகள் கால வரையறையின்றி நிறுத்தி வைப்பதாக பிசிசிஐ அறிவித் துள்ளது.

இந்தியாவில் போர்ப்பதற்றம் இருக்கும்போது கிரிக்கெட் போட்டி கள் நடைபெறுவது நல்லதல்ல என பிசிசிஐ அதிகாரி பிடிஐ செய்தி நிறுவனத்துக்கு கூறியிருந் தார்.

இந் நிலையில் மீதமுள்ள ஐ.பி.எல் போட்டிகள் வெளிநாட்டில் தொடருமா? அல்லது இந்தியாவி லேயே நடைபெறுமா? என்று கேள்வி எழுந்திருந்த நிலையில், இங்கிலாந்து கிரிக்கெட் வாரியம் இந்த அழைப்பை மேற் கொண்டுள்ளது. அழைப்பு ஏற்கப்படுமா? என்பது குறித்து தகவல் விரைவில் தெரிய வரலாம் எனத் தகவல்கள் தெரிவிக்கின் றன. (6-8)

# தர்மத்தின் ஞானத்தால் இதயங்கள் ஒளிரட்டும்

## வெசாக் தின வாழ்த்தில்– ஜனாதிபதி

(கொழும்பு)

புத்தரின் போதனைகளின் பாதையை முன்மாதிரியாகக் கொண்டு பொதுநலத்தில் சமத்துவம் மற்றும் சமூக நீதியுடன் கூடிய வளர்ச்சியடைந்த நாட்டை உருவாக்கி "வளமான நாடு- அழகான வாழ்க்கை" பற்றிய இந்நாட்டு மக்களின் விருப்பங்களை நிறைவேற்றுவதற்காக இன்னும் உறுதியாகவும் தைரியத்துடனும் ஒன்றிணைந்து செயற்படுவோம் என இந்த புனிதமான வெசாக் தினத்தில் அனைவருக்கும் அழைப்பு விடுப்பதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார். நேற்று ஊடகங்களுக்கு வெளியிட்ட வெசாக் தின வாழ்த்துச் செய்திக் குறிப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

ஒரு ஆட்சியாளர் நல்ல ஆட்சியை எவ்வாறு உருவாக்க வேண்டும் என்பதையும் பௌத்த தத்துவம் குறிப்பிடுகிறது. "சப்பங் ரத்தங் சுகங் சேதி- ராஜாசே ஹோதி தம்மிகோ" ஒரு நாட்டின் முதற் குடிமகனாகிய ஆட்சியாளர் நேர்மையானவராக இருந்தால் மக்கள் அனைவரும் மகிழ்ச்சியுடன் வாழ்வார்கள் என்று புத்த பெருமான் உபதேசித்துள்ளார்.

புத்த பெருமானின் பிறப்பு, ஞானம் மற்றும் பரிநிர்வாணம் ஆகியவற்றை நினைவுகூரும் வெசாக் பௌர்ணமி தினம் உலகெங்கிலும் உள்ள பௌத்தர்களுக்கு மிகவும் சிறப்பு வாய்ந்த நாளாகும். இந் நாளில் தர்மத்தின் ஞானத்தால் அனைத்து இதயங்களையும் ஒளிரச் செய்யும் புனித வெசாக் தினமாக அமையட்டும் என அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார். (6-8)



யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீ காமாக்ஷி அம்பாள்(நாச்சிமார் கோவில்) ஆலய தேர்த் திருவிழா நேற்றைய தினம் ஞாயிற்றுக் கிழமை பக்திபூர்வமாக இடம்பெற்றது. (படம்- சிவசாந்தன்)



# சித்ரா பௌர்ணமி-சித்ரகுப்தனின் அருளால் சர்வ பாபங்கள் நீங்கி எல்லா நலனும் பெறுவோம்

**கங்கையைத் தரித்தோன் பாலா கரிமுகாவுன்றன்**
**சங்கையாய் தரணியோர்கள் தயவுடன்**
**போற்றி செய்ய**
**மங்களமாக வாழ்ந்து வந்து எனக்கு அருளுநாதர**
**யெங்குமாய் நிறைந்தாய் நீயு மிறையவர்**
**போற்றி போற்றி**

சித்திரை மாதம் 12.05.2025 இன்று சித்ரா பௌர்ணமியன்று சித்திரபுத்திரனை எண்ணி விரதமிருந்தால் வாழ்க்கையில் நிகழ்ந்த துன்பக் கணக்குகள், சிரமக்கணக்குகள் நிவாரணமும், சுபீட்சமும் கிடைத்து வாழ்வதுடன் எல்லையில்லா கருணைக்குப் பாத்திரமாவோம்.

வில்லூன்றி வீரகத்திவிநாயகர் சித்திரா பூரணைப் பெருவிழா- மூர்த்தி, தலம், தீர்த்தம் ஒருங்கே அமையப் பெற்று பூர்வதனுக்கோடி அருள்மிகு சிறப்பு தரிசிப்போம். பிதிர்தர்ப்பணங்கள் செய்வோம்- சித்திரபுத்திரா வரலாறு படிப்போம்-திருவருள் பெறுவோம் காரைநகர் களபூமி கற்பக விநாயகர், வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயம் இன்னும் பல ஆலயங்களில் சிறப்புகள் தரிசனம் பெறுவோம்.

பூலோகத்தைப் படைக்கும் முன்னர் இன்னார்க்கு இன்னபணி என்று வகுக்கப்பட்டன.

யமனுக்கு தண்டனை கொடுக்கும் தொழில் விதிக்கப்பட்டது. ஆனால் சாட்சிவேண்டுமே என எம்பெருமான் சிவன் சிந்தனையில் இருந்து, அவர் கேட்டதெல்லாம் கொண்டுவந்து தந்தாள் உமாதேவி. பச்சை,நீலம், மஞ்சள்,வெண்மை, சிவப்பு என ஐந்து நிறம் கொண்டு தன்னைப் போலவே ஒரு அழகிய உருவம் வரைந்தார் . அந்த சித்திரம் எப்படி என உமையிடம் வினாவி, வலது கையில் தங்க நிற எழுத்தாணி ; இடது கையில் ஓலைச்சுவடி அமைய , சக்தி உமை சித்திரபுத்திரன் வண்ணத்தை என்ன செய்யப்போகிறாள் என வினவ , இது நம் புத்திரன் என இறைவன் திருத்தி கருணையைக் கண்களில் தேக்கி "கண்மணியே வா" என அன்னை பராசக்தி அழைக்க பொற்பலகையிலிருந்து வெளியே வந்து புதல்வன் உலகமாதா பிதாவாகிய பார்வதி , பரமேஸ்வரன் பாதங்களை பவ்யமாக வணங்க "சித்ர குப்தர்" என அழைத்து ,அதுதான் உன் பெயர். சிரஞ்சீவியாய் ஜீவராசிகளின் பாவ புண்ணிய கணக்கு எழுதிக் கொண்டிரு அன்னை வயிற்றில் உதித்தவுடன் புதிதாய் ஓலைகட்டு போட ,சன்னமான ஓலைகளில் நீ எழுதும் பாவபுண்ணிய கணக்கு முடிந்து புண்ணியத்துக்கு புதுக்கட்டும், பாவத்துக்கு தண்டனையை பூலோகத்திலேயே அனுபவித்து பூலோக நகரம் முடிந்து, மேலுலக நகரம் வரலாம். எவரும் முறைப்படி ஒரு கடவுளையாவது பூரணமாக நம்பி வழிபட்டு வந்தால் சித்திரகுப்தர் அருளும் கட்டாயம் கிடைக்கும். இந்தப் புண்ணிய சித்திரா பௌர்ணமி தினத்தில் சித்திரா புத்திர பூசை செய்து பிறகு ஆலயங்களில் சித்திரா புத்திர நாயனார் கதையை பயபக்தியுடனும், சித்தையுடனும் படிப்பவர்களுக்கும், நோன்பு இருந்து கேட்பவர்களுக்கும் சித்திரா புத்திரன் கருணை காட்டுவார்.

படித்தவரும், கேட்டவரும், படிப்பிக்கச் செய்தவரும் பூலோகத்தில் தீர்க்காயுளுடனும் சகல சௌபாக்கியங்களுடனும் வாழ்வார். பெண்கள் தீர்க்க சுமங்கலியாய், நோய் இன்றி , புத்திர பாக்கியம், பதினாறு பேறுகளும் பெற்று சீருடனும் சிறப்புடனும் வாழ்வார்கள்.

எல்லாக் கணக்கு எழுதவென்று வந்த பிறந்த சித்திர புத்திரர் சிறப்பாக அவதாரம் செய்த தினம் இன்றாகும். இன்று வீடுகள் துப்பரவாகவும், வீட்டிலேயும் அல்லது ஆலயங்களிலும் விரத நோன்பும், **சித்திர புத்திரா புத்திர கதையும் ஓதுவதுடன் அப்பன் சிவனின் திருவாசகத்தேன் நமச்சிவாய பதிகமும், அம்மையின் அபிராமி அந்தாதியும் முருகன் கந்தர் அநுபூதியும் அருணகிரிநாதர் திருப்புகழ் 1316- பழனி-பாடல் பதிகம் ஓதுவோம்**

**"மனக்கவலையேதுமின்றி உனக்குடிமையே**
**புகுந்து**
**வகைக்குமநு நூல் விதங்கள் தவறாதே"**

**மேற்படி திருப்புகழ் முழுவதும் படிப்போம்**

**கருத்து- மனக்கவலை சிறிதேனும் இல்லாமல் உனக்கு அடிமை செய்யும் பணியையே பூண்டு, வகையாய் அமைந்துள்ள நீதி நூல் முறைகளில் தவறாமல் நல்லமுறையில் மன விருப்பங்கள் முறைப்படி தியானித்து விளங்கி ஐயந்திரிபு இல்லாமல் வேதத்திற்கு சொல்லப் பட்ட பொருளை ஆராய்ந்து விரும்பி மலர்ப் பாதங்களையே பணிவோம்.**

**அஞ்செழுத்தை நெஞ்சில் வைத்து அரனை**
**மிக நினைந்து**
**மெய்யாய் அழுதால் சிவனைப் பெறலாம்**
**உய்யும் உபாயம் இதுவெனக் கூறி**
**மெய்யாய் வாழ்ந்துசிவமாய் நிற்கும்**
**மணிவாசகனின் மலரடி போற்றி**

**க.கு.க சிவபாலன், போசகர்,**
**ஈழத்துச் சிதம்பரம்,**
**மாணிக்கவாசகர் மடாலயம்.**



# இராசிபலன்

12.05.2025
சித்திரை 29, திங்கட்கிழமை
பூரணை முன்னிரவு 10.29 மணிவரை

சுவாதி காலை 6.40 மணிவரை
சுபநேரம் 11.54-1.24 மணிவரை
இராகுகாலம் 7.24-8.54 மணிவரை

சித்திரா பௌர்ணமி விரதம்
சந்திராஷ்டமம்-
அச்சுவினி.

வள்ளுவன்

**மேஷம்**
வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், வாழ்க்கைத் துணை வழியே மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், பொது வாழ்வில் புகழ் கூடும், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**கடகம்**
சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, மனதில் நீண்ட நாட்களாக இருந்த பாரம் குறையும், தொலை தூரத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம்.

**துலாம்**
பக்குவமாகப் பேசி காரியம் சாதித்துக் கொள்வீர்கள், பயணத்தால் பலனுண்டு, ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு, பணப்பிரச்சினைகள் தீரும்.

**மகரம்**
உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், அதிஷ்ட வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், போசன சுகமுண்டு.

**ரிஷபம்**
அதிகம் செலவாகுமோ என நினைத்த காரியம் குறைந்த செலவில் முடிவுக்கு வரலாம், சேமிப்புகளை ஈடுகட்டும் எண்ணம் உருவாகும்,நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள்.

**சிம்மம்**
குடும்பத்தில் சுப காரியங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, நண்பர்கள் சொல்லும் ஆலோசனை உங்களுக்கு நல்லதாகத் தெரியும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**விருச்சிகம்**
தொழில் நலன்கருதி எடுத்த முயற்சிகளுக்கு கேட்ட இடத்தில் உதவி கிடைக்கும், ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.

**கும்பம்**
தொழில் ரீதியாக எடுத்த முயற்சிகளில் தாமதம் ஏற்படலாம், பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள், வீண் பழிகள் அகலும், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் கூடும் நாள்.

**மிதுனம்**
மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், அதிகாரிகள் அனுகூலமாக நடந்த கொள்வர், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, வருமானம் பெருக வழியமைத்து கொள்வீர்கள்.

**கன்னி**
வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், வீட்டுத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், இனிய செய்திகள் இல்லம் வந்து சேரலாம்.

**தனுசு**
தூரதேசத்திலிருந்து அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், பிரச்சினைகளிலிருந்து விடுபடுவீர்கள், பாக்கிகள் வசூலாகும் வாய்ப்புண்டு.

**மீனம்**
ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், உடல் நலனில் கவனம் தேவை, விரயங்கள் மேலோங்கும் நாள், வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள்.

**நீ உடலில் அணியும் ஆடையைவிட முகத்தில் அணியும் மலர்ச்சி மேலானது.**

# காட்டு யானைகளினால் தென்னை மரங்கள் அழிப்பு



(மன்னார்)

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பரப்புக் கடந்தான் கிராமத்தில் நேற்று முன்தினம் இரவு புகுந்த காட்டுயானைகள் பல தென்னை மரங்களை அழித்துள்ளது.

அழிக்கப்பட்ட தென்னை மரங்கள் அனைத்தும் 16 வயதுடையது என தெரிய வருகின்றது.

தொடர்ச்சியாக இக் கிராமத்தின் பல பகுதிகளில் இவ்வாறான காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்து காணப்படுவதாகவும் இதனால் தமது வாழ்வாதாரம் பாதிப்படைவதாகவும் தென்னைச் செய்கையாளர்கள் கவலை தெரிவித்தனர். உரிய தரப்புக்கள் நடவடிக்கை எடுத்து குறித்த கிராமத்தில் யானை வேலி ஒன்றினை அமைத்து தர நடவடிக்கை எடுக்க வேண்டுமென அக்கிராமத் தென் னைச் செய்கையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (6-8-285)

# தேசிய ஆக்கத்திறன் போட்டி

## யாழ்.மாணவிகள் இருவர் முதலிடம்





(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட தேசிய ஆக்கத்திறன் போட்டியில்(2024) யாழ். மாணவிகள் இருவரும் தேசிய மட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுள்ளனர்.

யாழ்.பிரதேச செயலர் பிரிவில் உள்ள அத்தியடி ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்திப் பிள்ளையார் அறநெறிப் பாடசாலை மாணவிகளான செல்வி அபிநயா சுஜீவன் (தரம்6) பேச்சுப் போட்டியிலும், செல்வி சிவகுகன் ஜனார்த்தனி (தரம்8) நீதிநூல் மனைப் போட்டியிலும், தேசிய மட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6.8)

# இரத்ததான முகாமும் இலவச கண் பரிசோதனையும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அளவெட்டி அளகொல்லை விநாயகர் ஆலய தொண்டர் சபையினரின் ஏற்பாட்டில் அமரர். தியாகராஜா தயாளன் நினைவு நாளை முன்னிட்டு இரத்த தானம் இலவச கண்பரிசோதனை மையமும் எதிர் வரும் 17 ஆம் திகதி சனிக் கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை அளவெட்டி அளகொல்லை விநாயகர் ஆலயத்தில் இடம் பெறவுள்ளது என ஆலய தொண்டர் சபையினர் தெரிவித் துள்ளனர். (3-8-110)

# வியாழ மாற்ற யாகம்

(யாழ்ப்பாணம்)

துணுக்காய்,ஒட்டங்குளம், விநாயகபுரம் அருள்மிகு பாணலிங்கேஸ்வரம் நர்மதா நதீஸ்வரர் சிவன் ஆலய வியாழமாற்ற யாகம் எதிர் வரும் 15 ஆம் திகதி வியாழக் கிழமை இடம்பெறவுள்ளது.

காலை 9 மணியளவில் வியாழமாற்ற ஹோம வழிபாடுகள் ஆரம்பமாகி நண்பகல் 12 மணியளவில் மகேஸ்வர பூஜையுடன் நிறைவடையும் என ஆலய ஆதீன கர்த்தா சபையினர் தெரிவித்துள்ளனர். (3-8)

# கட்டடத்திறப்பு விழா

(கரணவாய்)

மயிலிட்டி திருப்பூர் இளைஞர் நற்பணி ஒன்றிய சனசமூக நிலையத்துடன் இணைந்த கல்வி நிலையக் கட்டடத் திறப்பு விழா இன்று திங்கட்கிழமை காலை 9.15 மணி முதல் 10.30 வரை இடம்பெறவுள்ளது.

மயிலிட்டி திருப்பூர் இளைஞர் நற்பணி ஒன்றியத்தின் தலைவர் தி.மோகன் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் நா. வேதநாயகன், சிறப்பு விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் Dr.s.ஸ்ரீப வாணந்தராஜா, கௌரவ விருந்தினர்களாக தெல்லிப்பழை பிரதேச செயலர் திருமதி சிவகெங்கா சுதிஸ்னர், தெல்லிப் பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன், வலி வடக்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் சோ.சுகிர்தன் மற்றும் மயிலிட்டி ஆரம்ப சுகாதார வைத்திய அதிகாரி செல்வி Dr.குகாஞ்சனா கணேஷ் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளதாக மயிலிட்டி திருப்பூர் இளைஞர் நற்பணி ஒன்றிய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (3-8-60)

# நல்லை ஆதீன குருவின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை

(யாழ்ப்பாணம்)

ஏழாலை ஸ்ரீ வசந்த நாக பூசணி அம்பாள் ஆலய நிர்வாகத்தின் ஏற்பாட்டில் மறைந்த நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு ஏழாலை ஸ்ரீ வசந்த நாகபூசணி அம்பாள் ஆலயத்தில் இடம்பெறவுள்ளது.

இதன் போது விசேட தேவைக் குட்பட்டோருக்கான உதவித் திட்டங்கள் வழங்குதல்,வறிய மாணவர்களுக்கான உதவி வழங்கல், திருமுறை பாராயணம் செய்தல் மற்றும் அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான கல்வி உபகரணங்கள் வழங்குதல் என்பன இடம் பெற்று அன்னதானத்துடன் நிறைவடையவுள்ளது என ஏற்பாட்டாளர்கள் தெரிவித் துள்ளனர். (3-8)

# மாஞ்சோலை வைத்தியசாலை தேவைப்பாடுகளை கேட்டறிந்த

## முல்லை.மாவட்ட அரசாங்க அதிபர்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட மாஞ்சோலை பொது வைத்தியசாலைக்கு மாவட்ட அரசாங்க அதிபர் உமா மகேஸ்வரன் கடந்த வெள்ளிக் கிழமை களவிஜயம் மேற்கொண்டு வைத்தியசாலையின் தேவைகளைக் கேட்டறிந்து கொண்டார்.

குறித்த விஜயத்தின் போது வைத்தியசாலையின் பௌதீக அபிவிருத்தி, அத்தியாவசியமானதும் அவசரமானதுமான தேவைகளையும் கேட்டறிந்து கொண்டார். இதன்போது முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியக் கலாநிதி உமாசங்கர், வைத்தியக் கலாநிதி சுதர்சன், ஏனைய வைத்தியர்கள் மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் முதலானோர் கலந்து கொண்டனர். (6-8)

# ரூ.2 லட்சம் பெறுமதியான செப்புக்கம்பி, கேபிள்கள் மீட்பு

## இருவர் கைது



(மன்னார்)

மன்னார் ஜிம்ரோ நகர் பகுதியில் 2 லட்சம் ரூபாய் பெறுமதியான 17 கிலோ 200 கிராம் செப்புக் கம்பி மற்றும் தொலைபேசி கேபிள்களுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் பொலிஸ் நிலையத்தில் வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய குறித்த சந்தேக நபர்களை மாவட்ட குற்றத் தடுப்புப் புலனாய்வு பிரிவு பொறுப்பதிகாரி தலைமையிலான அதிகாரிகள் குழுவால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் 19 வயதுடையவர்கள் என்று தெரிய வருகிறது. இந் நிலையில் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத் துள்ளனர். (6-8-285)

# யாழ்.கல்வி வலயம் நடத்திய செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலயத்திற்கு உட்பட்ட யாழ்ப்பாணம், நல்லூர்,கோப்பாய்க் கோட்ட மட்டப்போட்டியில் முதல் மூன்று இடங்களை பெற்ற அணிகளுக்கான வலயமட்ட செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வானது கல்வி அமைச்சின் சுற்றறிக்கைக்கு அமைவாக வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி மாலதி முகுந்தன் தலைமையில் நேற்று முன்தினம் சனிக் கிழமை கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.



இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ பீட பேராசிரியர் செல்வன் கண்ணதாசன் கௌரவ விருந்தினராக ஈ.எஸ்.பி நாகரத்தினம் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

இதன்போது யாழ்.இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை மாணவிகளின் இசைவும் அசைவும் நிகழ்வும் இடம் பெற்றது. அதனைத்தொடர்ந்து வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில் வழங்கல் நிகழ்வும் நடைபெற்றது.

இப்போட்டியில் முதல் இடம் பெற்ற அணிகள் மாகாண தேசிய மட்ட போட்டிகளிற்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3-8)

# ஆப்ரேஷன் சிந்தூர் முடியவில்லை இந்திய விமானப்படை தெரிவிப்பு!

(டில்லி)

இந்தியா - பாகிஸ்தான் போர்நிறுத்தம் ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் ஆப்ரேஷன் சிந்தூர் இராணுவ நடவடிக்கை இன்னும் முடிவடையவில்லை என்று நேற்று இந்திய விமானப்படை தனது சமூக வலைத்தள பக்கத்தில் அறிவித்துள்ளது.

பஹல்காமில் பயங்கரவாதத் தாக்குதல் நடத்திய பாகிஸ்தானுக்கு இந்தியா . 'ஆப்ரேஷன் சிந்தூர்' என்ற பெயரில் பதில் தாக்குதல் நடத்தி பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ள ஒன்பது பயங்கரவாதத் தளங்களை அழித்தது.

இந்நிலையில் போர் நிறுத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்ட பின்னரும் ஆப்ரேஷன் சிந்தூர் நடவடிக்கையில் விமானப் படைக்கு ஒதுக்கப்பட்ட பணிகளை துல்லியமாக வெற்றி கரமாக செய்துள்ளோம் எனவும் விவேகமான முறையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன எனவும் இந்திய விமானப்படை அறிவித்துள்ளது.

இதேவேளை, ஆப்ரேஷன் சிந்தூர் தொடர்பான செயற்பாடுகள் குறித்து சரியான நேரத்தில் விரிவான விளக்கம் அளிக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளது. (6-8)

# பாதுகாப்பு நிலவரம் குறித்து முப்படை தளபதிகளுடன் பிரதமர் மோடி ஆலோசனை

(டில்லி)

இந்தியா- பாகிஸ்தான் இடையே போர் நிறுத்தம் அமுலுக்கு வந்துள்ள நிலையில் நாட்டின் பாதுகாப்பு நிலவரம் குறித்து முப்படை தளபதிகளுடன் பிரதமர் நரேந்திர மோடி ஆலோசனை நடத்தி வருகிறார்.

பிரதமர் இல்லத்தில் நடைபெறும் இந்த கூட்டத்தில் பாதுகாப்பு துறை அமைச்சர் ராஜநாத் சிங், முப்படைகளின் தலைமை தளபதி, இராணுவத் தளபதி, கடற்படைத் தளபதி மற்றும் விமானப்படைத் தளபதி, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர்.

இரு நாடுகளிடையே நேற்று முன்தினம் மாலை போர் முடிவுக்கு வந்த பின்னரும் இரவு பல மணி நேரம் பாகிஸ்தான் தாக்குதல் நடத்தியது குறித்தும் குறித்த கூட்டத்தில் விவாதிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்தும் பாகிஸ்தான் விவகாரத்தில் முப்படைகள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் இந்தக் கூட்டத்தில் ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் கடந்த 48 மணி நேரத்தில் பிரதமர் மோடி தலைமையில் நடைபெறும் 3 ஆவது ஆலோசனைக் கூட்டம் இது என்பது குறிப்பிடத்தக்கது. (6-8)

# நைஜீரியா நெடுஞ்சாலையில் ஆயுதக் குழுவினர் தாக்குதல்

## 30 பேர் உயிரிழப்பு

(அபுஜா)

நைஜீரிய நெடுஞ்சாலையில் பயணிகள் மீது ஆயுதக் குழுவினர் நடத்திய தாக்குதலில் 30 பேர் உயிரிழந்தனர்.

இது குறித்து மனித உரிமைகள் அமைப்பான ஆம்னஸ்டி இன்டர்நேஷனல் நேற்று முன்தினம் சனிக்கிழமை தெரிவித்ததாவது, நைஜீரியாவின் தென்கிழக்கு பகுதியில் உள்ள ஒகிக்வோஒவேரி நெடுஞ்சாலை வழியாகச் சென்ற வாகனங்களின் மீது ஆயு தக் குழுவினர் தாக்குதல் நடத்தினர். இதில் சுமார் 30 பேர் உயிரிழந்தனர்.

கடந்த வியாழக்கிழமை நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் 20 இற்கும் மேற்பட்ட வாகனங்கள் மற்றும் லொறிகள் எரிக்கப்பட்டன என்று அந்த அமைப்பு தெரிவித்தது.

இந்தத் தாக்குதலுக்கு எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை என்றாலும், இண்டிஜினஸ் பீப்பிள் ஆஃப் பியாஃப்ரா கிளர்ச்சி அமைப்பின் ஆயுதப் பிரிவான ஈஸ்டர்ன் செக்யூரிட்டி நெட்வொர்க் இந்த படுகொலைகளை நிகழ்த்தியிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. (6-8)


# வலிகாமம் வடக்கு பிரதேசசபை காங்கேசன்துறை கடைகள் வாடகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் 2025

வலிகாமம் வடக்கு பிரதேச சபைக்கு சொந்தமான கீழ் குறிப்பிடப்படும் அட்டவணையில் விபரிக்கப்படும் கடையினை பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைய மாதாந்த வாடகைக்கு வழங்குவதற்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

**கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி :- 14.05.2025 தொடக்கம் 26.05.2025 பிற்பகல் 12.30 மணிவரை**

**கேள்விப்பத்திரம் ஏற்கப்படும் இறுதித்திகதி :- 26.05.2025 திங்கட்கிழமை பிற்பகல் 02.00 மணிவரை**

**கேள்விப் பத்திரம்திறந்து பரிசீலிக்கப்படும் திகதி:- 26.05.2025 திங்கட்கிழமை பிற்பகல் 02.30 மணிவரை**

கேள்விகள் இரு பிரதிகளில் தயாரித்து அரக்கு முத்திரையிட்டு மூலப்பிரதியினை செயலாளர், வலிகாமம் வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை எனும் முகவரிக்கு 26.05.2025 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்க கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும் அல்லது தலைமையலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். மறு பிரதியினை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்கு குறித்த திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்படல் வேண்டும்.

01. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுநராகக் கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படமாட்டாது. எனினும் தவறுதலாக வழங்கப்பட்டிருப்பின் அது நிராகரிக்கப்படுவதுடன் இது தொடர்பான வைப்புக்கள் ஏதும் மீளளிக்கப்படமாட்டாது.
02. கேள்வி கோருபவர் வலிகாமம் வடக்கு பிரதேசசபைக்கு உட்பட்ட நிரந்தர குடியிருப்பாளராக இருக்க வேண்டும்.
03. ஆகக் குறைந்த கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்படமாட்டாது.
04. கேள்விகள் திறக்கப்படும் சமயத்தில் கேள்விதாரரோ அல்லது அவரது அனுமதியளிக்கப்பட்ட பிரதிநிதியோ சமூகமளிக்க முடியும்.
05. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விகளை நிராகரிக்கவும் எந்தவொரு கேள்விதாரரை காரணம் காட்டாது ஏற்கவோ/ நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு அதிகாரம் உண்டு.
06. இவ் வியாபாரநிலையங்களுக்கான மாதாந்த வாடகை விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தால் நிர்ணயிக்கப்படும் தொகைக்கேற்ப சித்திபெறும் கேள்விதாரரிடமிருந்து பிரதேசசபையால் அறவிடப்படும். அத்துடன் காலத்திற்கு காலம் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தால் நிர்ணயிக்கப்படும் வாடகை செலுத்தப்பட வேண்டும்.
07. கடையை வாடகைக்கு எடுப்பவராலேயே கடை நடாத்தப்படவேண்டும். பிரதிநிதி எவரும் அவர் சார்பில் நடாத்த அனுமதிக்கப்படமாட்டார். எனினும் வாடகைக்கு பெற்றவரின் இயலாமை, இறப்பு போன்ற காரணங்களினால் அவரது வாழ்க்கைதுணை அல்லது அவரது வாரிசு நடாத்த அனுமதிக்கப்படுவர்.
08. கடை கட்டடத்தில் புனரமைப்புவேலைகள், மாற்றங்கள், சேர்ப்புகள் எதுவும் சபையின் அனுமதியின்றி மேற்கொள்ள முடியாது.
09. சித்திபெறாத கேள்விதாரரின் கேள்வி வைப்புப்பணம் ஒப்பந்தம் பூர்த்தியான பின்னர் மீளளிக்கமுடியும்.
10. தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் சபையால் வழங்கப்பட்ட கால எல்லைக்குள் முழுத்தொகையையும் முழுமையாகச் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்துகொள்ளவேண்டும். ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு ,இரு வாரத்திற்குள் பிரதேசசபையிடம் உரிய வியாபாரத்திற்கான வியாபார உரிமத்தினை பெற்று வியாபாரம்/ தொழில் ஆரம்பிக்கப்படல் வேண்டும்.
11. சித்திபெற்ற கேள்விதாரரால் பிரதேசசபைக்கு செலுத்தப்பட்ட ஒருங்கிணைந்த கட்டுப்பணம் எச்சந்தர்ப்பத்திலும் மீளளிப்புச்செய்யப்படமாட்டாது.
12. பெற்றுக்கொள்ளும்கடைகளில்ஏற்படும்பாதிப்புகளுக்கு குத்தகைக்கு எடுத்தவரே பொறுப்புடையவராவார்.
13. சித்தி பெறும் கேள்விதாரர் பிரதேசசபையால் அங்கீகரிக்கப்படாத பொருள்களை விற்பனை செய்வதோ, மதுபானவகைகளோ, போதை வஸ்துக்களோ அல்லது தடைசெய்யப்பட்ட வேறு எந்தபொருள்களையோ விற்பனை செய்வது தடை செய்யப்படுவதுடன், கடைக்கட்டடம் வேறு எந்த சட்ட விரோத நடவடிக்கைகளுக்கும் பாவித்தல் கூடாது.
14. வாடகைப்பணம் ஒவ்வொரு மாதமும் 10 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்த வேண்டும். தவறின் தண்டப்பணமும் சேர்த்து அறவிடப்படும் என்பதுடன் வாடகைப்பணம் மூன்று மாதங்கள் தொடர்ந்து செலுத்த தவறின் முன்னறிவித்தலின்றி வாடகை ஒப்பந்தம் தானாகவே இரத்துச் செய்யப்பட்டதாக கருதப்படும்.
15. சித்திபெறும் கேள்விதாரர் 31.05.2025 இற்கு முன் ஒருங்கிணைந்த கட்டுப்பணம் முழுவதனையும் ஒரே தடவையில் செலுத்துதல் வேண்டும்
16. கேள்வி சம்மந்தமாக மேலதிக விபரங்களை/தகவல்களை பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் நேரடியாகவோ அல்லது 0212241130 தொலைபேசி இலக்கத்தின் ஊடாகவோ பெற்றுக்கொள்ளலாம்.

| விபரம் | பரப்பளவு (சதுர அடி) | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (ஒருங் கிணைந்த கட்டுப்பணம்) | மாத வாடகை | கேள்விப் பத்திர கட்டணம் | கேள்வி வைப்பு மீளளிக்கக் கூடியது |
|---|---|---|---|---|---|
| கீரிமலை சந்தைக்கடை -02 (கண்ணாடியினால் பிரிக்கப்பட்டு அடைக்கப்பட்ட பகுதி) | 392 | 768,000.00 | 3,200.00 | 1,500.00 | 76,800.00 |
| மல்லாகம் சந்தை கடை தொகுதி இல 2 | 162.5 | 840,000.00 | 3,500.00 | 1,500.00 | 84,000.00 |
| மல்லாகம் சந்தை கடை தொகுதி இல 6 | 162.5 | 840,000.00 | 3,500.00 | 1,500.00 | 84,000.00 |
| மல்லாகம் சந்தை கடை தொகுதி இல 7 | 162.5 | 840,000.00 | 3,500.00 | 1,500.00 | 84,000.00 |

(12.05.2025) (சி-2949)

திரு.சு.சுதர்ஜன், உள்ளூர் அதிகார பெறுகைச்சபை
வலிகாமம் வடக்குபிரதேச சபை, காங்கேசன்துறை.



# சீரணி நாகபூஷணி
# சீரணி, சண்டிலிப்
# ஆலய இரதோற்ச
# 12.05.2025 இன்று திங்



## தேவஸ்தான பிரதம குருக்களின் ஆசிச்செய்தி

அண்ட சராசரங்களையும் அனைத்து மக்களையும் காத்தருளும் ஆதிபராசக்தி யாழ் மாநகரின் கண்ணே சண்டிலிப்பாய்க் கிராமத்தில் சீரணிப் பாதியிலே ஸ்ரீ நாகபூஷணியாக வீற்றிருந்து அடியார்களின் பிணிகளையும் துயர்களையும் நீக்கி வருகின்றாள்.

சீரணி ஸ்ரீ நாகபூஷணித் தாயின் மகோற்சவம் 26.04.2025 இல் ஆரம்பமாகி சிறப்பாக நடைபெற்று வரும் நிலையில் சித்திராப் பௌர்ணமியான இன்று அம்பாளின் தேர்த்திருவிழா வெகு சிறப்பாக நடைபெறுகிறது. விநாயகப் பெருமானுடைய தேரும் முருகப்பெருமானுடைய தேரும் முன்னே செல்ல, நாகபூஷணித்தாயார் தனது பொலிவுமிக்க தேரிலே ஆரோகணித்து வரும் காட்சியைப் பார்க்க ஆயிரம் கண்கள் இருந்தாலும் போதாது. நாகபூஷணித் தாயாருடைய தேரின் வடம் பிடிப்பது நல்லதோர் பேறு எனத் திரண்டு வரும் அடியார்கள் கூட்டத்தை அளவிடத்தான் முடியுமா? அனைத்து அடியார்களுக்கும் நாகபூஷணித் தாய் நல்லருள் புரிய வேண்டும் என இறைஞ்சி ஆசி கூறுவதில் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

**லோகசமஸ்தா சுகினோபவந்து கிரியா அரங்கார வருதி**
**சிவஸ்ரீ.கு.சோமஸ்கந்தகுருக்கள்,**
**மகோற்சவகுரு. (தேவஸ்தான பிரதம குரு)**



## வாழ்த்துச் செய்தி

வரலாற்றுப் பெருமை மிக்க தாய்த்தெய்வமான சண்டிலிப்பாய் சீரணி ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் தேர்த்திருவிழா சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்கக்கிடைத்த வாய்ப்பினைப் பெரும் பேறாக கருதுகின்றேன்.

சீரணி என்னும் வளவில் தாம் இருப்பதினை முன்னோருக்கு அறிவித்து கோயில் கொண்டு இருக்கும் அன்னையானவள் நாகத்தை ஆபரணமாகக் கொண்டமையினால் "நாகபூஷணி" எனப் போற்றப்படுவது வரலாறு. இப்பிரதேசத்தில் மாத்திரமல்லாது ஈழத்தின் பலபிரதேசத்தில் இருந்து வருகை தந்து மனமுருகி வேண்டுகின்ற அடியவர்களின் குறைபோக்கும் கருணைக் கடலாக விளங்குகின்ற நாகபூஷணி அன்னையானவள், இந்துசமய வரலாற்றில் தனித்துவமான தாய்த்தெய்வமாக விளங்குகின்றமை எமக்கெல்லாம் பெருமையாகும்.

இந்த ஆண்டு மகாகும்பாபிஷேகத்தின் பொருட்டு பிரமாண்டமான சிற்பசித்திர வேலைப்பாடுகளுடன் பொலிவு பெற்றிருக்கும் ஆலய திருவீதியிலே தேர் வலம் வருகின்ற இந்த இனிய வேளையிலே பக்தர்களின் துன்பங்கள், மனக்குறைகள் அனைத்தையும் நீக்கி சிறந்த சௌபாக்கியங்களோடு வாழவழிகாட்ட வேண்டுமென்று பிரார்த்திக்கின்ற அனைவருக்கும் நல்லருள் பாலித்திட எல்லாம் வல்ல சீரணி ஸ்ரீநாகபூஷணி அம்பாளின் பாதக்கமலங்களை போற்றித் துதிக்கின்றேன்.

**திருமதி சுபாஜினி மதியழகன்,**
**பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்.**

## சண்டிலிப்பாய் சீரணி நாகபூஷணி அம்பாளின் வரலாறு

சீரணி நாகபூஷணி அம்மன் கோயில் யாழ்ப்பாணம் மாவட்டம், வலிகாமம் தென்மேற்குப் பிரிவில் சண்டிலிப்பாய் என்ற கிராமத்தில் உள்ள "சீரணி"யில் அமைந்துள்ளது.

தம்மை வழிபட்டுப் பூசித்த நாகமொன்றைத் தம்மருமைத் திருமேனியில் ஆபரணமாய் பூண்ட காரணத்தால் இத்தேவியும் நாகபூஷணியம்மை என்று அழைக்கப்படுகிறாள்.

நாகபூஷணி வழிபாட்டுக்கு யாழ்ப்பாண நாட்டின் இரு கண்களாக விளங்குவன நயினை மற்றும் சீரணி என்னுமிடங்களில் விளங்கும் நாகபூஷணியம்மை ஆலயங்களாகும்.





## தர்ம கர்த்தா சபையின் வாழ்த்துச் செய்தி

**திருமதி.கவிதா தில்லைராஜ்**
**பொருளாளர்**

**திருமதி.ராஜினி சதீஸ்வரன்**
**செயலாளர்**

சண்டிலிப்பாயில் கோவில் கொண்ட சர்வலோகநாயகி தேரேறுகிறாள்
சாந்தமும் சாத்வீகமும் நிறைந்து மக்கள் வாழ தேரேறுகிறாள்
சிரித்த முகத்துடன் சிங்காரமாய் சிம்மவாகினி தேரேறுகிறாள்
சீரணியில் அமர்ந்து சீரான வாழ்வு தருபவள் தேரேறுகிறாள்
சுந்தர வதனத்துடன் சுகந்தமாய் காட்சி தருபவள் தேரேறுகிறாள்
சூதுவாது இல்லாமல் சூடம் ஏற்றினாலே மகிழ்பவள் தேரேறுகிறாள்
செந்தூரப் பொட்டிட்டு செண்பகமாலை அணிந்து தேரேறுகிறாள்
சேவற் கொடியோனை அணைத்தவள் சேர்ந்து எம்மை வாழ
வைப்பவள் தேரேறுகிறாள்
சைந்தவி பைரவி சாம்பவி என பல நாமங்களைக் கொண்டவள்
தேரேறுகிறாள்
சொக்கநாதனுடன் இணைந்து சொர்ணாம்பிகையாகக் காட்சி தருபவள்
தேரேறுகிறாள்
சோதனைகளை அகற்றி எமை சோர்ந்து போகாமல் வாழ வைப்பவள்
தேரேறுகிறாள்
சௌபாக்கியங்களைத் தந்து சர்வமும் சக்தி மயமே எனக் காட்சி தர
இன்று தேரேறுகிறாள் எம் தாய்.

**சீரணி ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் தர்மகர்த்தா சபை**







ஆதிசக்த
மண்ணில்
வணங்குவே
ஒளிர்க்கீற்
இருளொளி வ
பரவ வழிபடுவோமே. சீரணித்
வாழ்விலும் பரவி வாழ்வு சிறக்
வணங்குவோமே. அவள் திரு
வணங்குவோமே. உலகத்து உ
செய்யும் நாயகி அவளே எமக்
அவளின்றி ஓரணுவும் அ
இன்னல்கள் களையும் மகாசக்
அவளே பிண்டத்து சிற்றாற்றலு
அவளாட்சியே. ஆக்கச
அகிலாண்டடேஸ்வரியே. தா
படுவதற்கு பேறு பெற்றோம். க
ஒலிக்க போற்றுகின்றோ
சரணடைகின்றோம். எத்தி
வாழ்த்துகின்றோம்.
ஓம் சீரணித்தாயே
**திருத்தொ**

**இரதோற்சவம் சிறப்புற வாழ்த்துவோர்:**


**சீரணி மஹால்**
**திருமண மண்டபம்**
தொ.பே: 021 225 5785 சீரணிச்சந்தி, சண்டிலிப்பாய்.

**மொடேன் மற்ஸ் அக்கடமி**
-சண்டிலிப்பாய்-
MODERN MATHS ACADAMY
புதிய கல்வியாண்டு - 2024
தரம் 01- O/L, A/L வரை
(தமிழ்மொழி மூலம், ஆங்கிலமொழி மூலம்)
எல்லாப் பாடங்களுக்குமான வகுப்புக்கள் ஆரம்பமாகி நடைபெறுகின்றது.
தொ.பே: 077 817 5822
நிர்வாகி: B.Kuga (கணித ஆசிரியர்).

**தரன் கல்லூரி**
மருதடிச்சந்தி, மானிப்பாய்.
தரம் 06 முதல் O/L, A/L கலை மற்றும் வர்த்தகப் பிரிவுகள் யாழ். முன்னணி ஆசிரியர்களால் நிகழ்த்தப்படுகிறது.

**KIRUBA MOTORS**
**கிருபா மோட்டோஸ்**
பிரான்பற்று வீதி, சங்கானை.

**RUDRA ELECTRIC**
All kind of electrical, electr
retail who
T.P: 077 070 0377
No. 22/1, Ponnalai Ro
Stanley Roa
(Sreethar Thea

**லக்ஷ்மி புடவையகம்**
**LUXMI TEXTILES**
No.10, Aalady Junction, Manipay.
077 239 1800

**Golden Electrical**
All Kind of Electrical Needs
Keerimalai Road, Sandilipay.
Tel: 077 405 6771

**ஐங்கரன் மோட்டார்ஸ்**
மானிப்பாய்
Authorized Dealers for Hero and Honda Spare Parts. Authorized Distributors of CEAT TYERS in jaffna. Market view, Jaffna Road, Manipay.
iynkaranmotors@gmail.com
Tel: 021 225 5150

**Nagaposani**
**A to Z Travels**
Sandilipay
Tel: 077 458 3514

With Best Compiliment From
**சக்தி எலக்ரிக்கல்**
மின்சார, இலத்திரனியல்
பொருட்களின் விற்பனை
முதல்வன் சந்தைச் சதுக்க
சங்கானை.
தொ.பே: 077 327 6397

# அம்பாள் தேவஸ்தானம்

# ப்பாய்.

# வ சிறப்பிதழ்

## ங்கட்கிழமை



சீரணி நாகபூஷணியம்மைக்குத் திருத்தேர்
செய்யத் திருவுளங் கொண்ட திருவுடையாளன்!
பவத்தொண்டாய அவத் தொண்டகற்றித்
தவத்தொண்டாய சிவத் தொண்டிற் திளைத்த சீரியன்!

மலாக்காத்தம்பையா வள்ளியம்மை
குன்றாவிளக்கு நற்பண்பாளன்!
நற்றவசீலன்! தங்கத்தவத்தினன்!
தருமசீலன்! மாபெரும் வள்ளல்!
காமதேனு! புண்ணியசீலன்!
செல்வச் சீமான்! அறம் வளர்த்த அண்ணல்!!






### செஞ்சொற்செல்வரின் ஆசிச்செய்தி

அற்புதம் நிறைந்த அம்பாள் குடிகொண்டிருக்கும் திருக்கோவில் சீரணி. இத்திருக்கோவில் வருடாந்த மகோற்சவத்தில் இன்று திருத்தேர்விழா நடைபெறவுள்ளது. பலவூர் மக்களும் திரண்டு கலந்து சீரணி நாகபூணி அம்மனின் திருத்தேரைத் தரிசித்து மகிழ்வர். இப்புண்ணிய நாள் சிறக்கப் பிரார்த்திப்பதோடு அடியார்கள் சீரோடு வாழ நல்லாசிகளைத் தெரிவித்து மகிழ்கிறேன்.

சீரணி அம்பாளின் திருவிழாக் காலம் என்பது வழிபாட்டுப் பாரம்பரியத்தோடு எம் பாரம்பரிய கலைகளையும் பாதுகாக்கும் காலமாகக் கருதலாம். அம்பாளின் கருணையால் யாவும் சிறக்க வேண்டி அமைகிறேன்.

**கலாநிதி.ஆறு திருமுருகன்,**
**தலைவர், ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை.**

### வடம் பிடிப்போம் வாரீர்...



**இ.தவகுமாரன்**
**(செயலாளர்)**
**இந்து இளைஞர்மன்றம்.**

நாட்களில் நன்னாளாம்
சித்திரைப் பௌர்ணமியில்
சிம்மவாகினியும் சிவந்த கண்ணவளும்
புவனம் தலைகாக்க திருவுளம் கொண்டவளும்
அங்கயற்கண்ணியவள் திரு உலா காண-எமக்கு
அங்கமெல்லாம் கண்கள் வேண்டும்!

பெண் தெய்வ தாயவளே...
அகிலமெங்கும் துன்பங்கள் வேரறுத்து-நற்
சாந்தியும் சமாதானமும் கொண்டு
தேசமெல்லாம் அன்பு வார்த்து
மானுடர் பேருவகை கொள்ளும் வண்ணம்
தேரிலேறி வந்து தேசமெல்லாம்...
காக்க வேண்டுகின்றோம்..!
சீரணித்தாயே நின் பாதம் போற்றி! போற்றி



**ம.வசீகரன், (பொருளாளர்)**
**இந்து இளைஞர் மன்றம்.**

### ஓம் சீரணித்தாயே

திசக்தியின் அருள் வடிவமே எம் ணில் பரவ அவள் பாதங்கள் பணிந்து ங்குவோம். அவள் கண்களிலிருந்து க்கீற்றுகள் அருளொளியாக மிளிர. ளாளி விலகி அனைவருக்கும் இன்ப ஒளி

ணித்தாயின் அருளாசி அனை வருடைய பு சிறக்க சக்தியை கைகூப்பி சிரந்தாழ்த்தி ள் திருநாமம் ஓதி மறவாத அன்பு வேண்டி கத்து உயிர்களிடத்தில் சமமான அருளாட்சி எமக்கும் நல் வழி காட்ட துதிப்போமே. அசையா அரும் பெருஞ்சக்தியவள். மகாசக்தியவள். அண்டத்து பேராற்றலும் ஆற்றலும் அவளே எண்ணத்து ஆற்றலும் க்கசக்தியும் அழிக்கும்சக்தியும் யே. தாயே எம்மூரில் உன் பாதங்கள் ாம். கணக்கின்றி உன் நாமம் எந்நாளும் ன்றோம், வணங்குகின் றோம், எத்திருத்தொண்டு செய்தாலும் சிறக்க

**தொண்டை வாழ்த்தி வணங்குபவர்**
**லோ.அருள்ராஜ்**
**கிராம அலுவலர்,**
**J/143 சண்டிலிப்பாய் மேற்கு.**



### சீரணி ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் தேவஸ்தான தர்மகர்த்தா சபையின் தலைவரின் வாழ்த்துச் செய்தி

ஈழத்திருநாட்டில்; அடியவர்களின் தோஷங்களை அகற்றிப் பேரருள் புரியும் இரண்டு அம்பாள் ஆலயங்கள்-நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயமும், சீரணி ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயமுமாகும். சரித்திரப் பிரசித்தி பெற்ற சீரணித்தலத்தில் அம்பாள் பற்பல அற்புதங்களை நிகழ்த்தியுள்ளமை அனைவரும் அறிந்ததே. அம்பாளின் மிகப்பெரிய அற்புதம் 2024 ஆம் ஆண்டு ஜீன் மாதம் ஆலயத்தின் பாலஸ்தான கும்பாபிஷேகம் நடைபெற்று ஒருவருட காலத்துள், மிகவும் பிரமாண்டமான புனருத்தாரணத் திருப்பணிகள் நடைபெற்று "பொற்கோவில் தானோ" என்பலரும் அதிசயித்துப் பக்தியுடன் போற்றத்தக்கதாக மிளிரும் நிலையில் 10.02.2025 இல் சிறப்புறக் கும்பாபிஷேகம் நிகழ்ந்தேறியது. விசுவாவசு ஆண்டின் மகோற்சவம் மிகச் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற நிலையில் இன்று நாகபூஷணித்தாய் அடியார்களின் துயர்களைப் போக்கிடவும் எதிர்மறை ஆற்றல்களை அழிக்கவும் தேரேறி வருகின்றாள். மிகுந்த அன்போடும் பக்தியோடும் நாகபூஷணித்தாயை தேரிலே கண்டு களித்து வழிபட வருகின்ற பல்லாயிரக்கணக்கான பக்தர்களுக்கும், தத்தமது இடங்களில் இருந்து அகக்கண்களால் தரிசித்து மகிழும் பக்தர்களுக்கும் அம்பாளின் பரிபூரண திருவருள் கிடைக்க வேண்டுமென தர்மகர்த்தா சபையினராகிய நாமும் அம்பாளை அன்போடு இறைஞ்சுகின்றோம்.

"ஓம் சக்தி"

**சி.சிவகுருநாதன்**
**தலைவர், தர்மகர்த்தா சபை.**



**கு.தனபாலசிங்கம்,**
**(மூத்த உறுப்பினர்),**
**இந்து இளைஞர் மன்றம்.**

### தங்கரத தேரேறி....

அம்மாளே போற்றி போற்றி!
ஆரணித்தாயே போற்றி போற்றி!
சந்ததி காப்பவளே போற்றி போற்றி!
சாந்த சொரூபினியே போற்றி போற்றி!
சிரித்த முகத்தவளே போற்றி போற்றி!
சீரணித் தாயே போற்றி போற்றி!
சகலமும் எமக்கு நீயே!
நாகபூசணித்தாயே போற்றி! போற்றி!



**இ.சிறிதரன் (தலைவர்)**
**இந்து இளைஞர் மன்றம்**

TRICALS (PVT) LTD
electronic and plumbing items
l whole sale
377 / 077 723 3213
lai Road, Manipay, Jaffna
y Road, Jaffna
Theater Opposite)

மணி அன் ஈசன் ஜுவெல்லறி
Mani & Easan Jewellery
22 கரட் தங்க நகைகள் ஓடருக்கு உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.
தொ.பே: 021 791 2677, 076 256 5272
இல.02, நவீன சந்தை, பிரதான வீதி, சங்கானை.

கந்தசாமி அன் சன்ஸ்
KANTHASAMI & SONS
பலசரக்குப் பொருட்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
Main Street, Chankanai.
பிரதான வீதி, சங்கானை.

t From:
கல்ஸ்
னியல்
பனை
துக்கம்,
3397

துர்க்கா மரத்தொழிற்சாலை
Dealers in Timbers of All Kind of Furniture
Chavakacheri Road, Allayampathy, Seerani Junction, Sandilipay.
077 711 4852

Yaso Textile
Nelliyady.

AMBAL Rice mill
அம்பாள் அரிசி ஆலை
காரைநகர் வீதி, சண்டிலிப்பாய்.
Karainagar Road, Sandilipay
T.P: 072 785 0550

**தர்மகர்த்தா சபை,**
**சீரணி நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம்**

(C-0189)

# உலங்கு வானூர்தியின் சிதைவுகள் பரிசோதனைக்கு

(கொழும்பு)

மாதுருஓயா நீர்த்தேக்கத்தில் விழுந்து விபத்துக்குள்ளான பெல் 212 உலங்கு வானூர்தியின் சிதைவுகளை கட்டுநாயக்க விமானப் படைத் தளத்திற்குக் கொண்டு செல்லத் திட்டமிடப்பட்டுள்ளது.

குறித்த நீர்த்தேக்கத்திலிருந்து நேற்று முன்தினம் மீட்கப்பட்ட உலங்கு வானூர்த்தியின் சிதைவுகளைப் பரிசோதனைக்கு உட்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாக விமானப்படை ஊடகப் பேச்சாளர் குரூப் கப்டன் எரந்த கீகனகே தெரிவித்தார்.

விபத்து குறித்து விசாரிப்பதற்காக விமானப்படைத் தளபதியால் அமைக்கப்பட்டுள்ள ஒன்பது பேர் கொண்ட குழு விபத்து நடந்த இடத்தை நேரில் சென்று ஆய்வு செய்தது.

இதன்போது உயிரிழந்த படையினரின் பிரேத பரிசோதனை நடத்தப்பட்டதுடன் குறித்த அறுவரும் நீரில் மூழ்கி உயிரிழந்தமை தெரிய வந்தது.

இதனையடுத்து, அவர்களின் உடல்கள் நேற்று முன்தினம் அவர்களது குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டன. (6-8)

# மாகாண சபை தேர்தல் நடத்த வாய்ப்பில்லை

## மகிந்த ஆரூடம்

(கொழும்பு)

அரசாங்கம் மாகாண சபைத் தேர்தலை வெகுவிரைவில் நடத்தும் என்று எதிர்பார்க்க முடியாது என முன்னாள் ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷ தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அரசியல் குழு கூட்டத்தில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தலைமையில் கொழும்பு விஜேராம மாவத்தையில் உள்ள மஹிந்த ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்றது.

சமகால அரசியல், பொருளாதாரம் மற்றும் சமூக நிலைவரம் குறித்து ஆராயப்பட்டது. இதன்போதே இவ்வாறு தெரிவித்தார்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் முடிவுகள் அரசாங்கத்துக்கு எதிர்மறையானதாக உள்ளதால் பிறிதொரு தேர்தலை நடத்தும் தீர்மானத்தை அரசாங்கம் தற்போது எடுக்காது என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார். (6-8)

# பச்சிலைப்பள்ளி பிரதேச சபை,பளை

# பகிரங்க அறிவித்தல்

## ஆதனவரி செலுத்தாத உரிமையாளர்களிடம் இருந்து ஆவணங்கள் கோருதலும் நிலுவை அறவீடு செய்தலும்

எமது பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் பளைநகர வட்டாரத்தின் பளைநகரம், புலோப்பளை மேற்கு மற்றும் கச்சார்வெளி ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளில் உள்ள ஆதனங்களிற்கான ஆதன வரியானது 2024 நான்காம் காலாண்டிலிருந்து அறவீடு செய்யப்பட்டுவருகின்றது. எனினும் கீழ்குறிப்பிடப்படும் ஆதன இலக்கத்தினையுடைய ஆதன உரிமையாளர்கள் இதுவரை தங்களுடைய ஆதனங்களின் ஆவணங்களினை சமர்ப்பித்து பதிவுகளினை மேற்கொள்ளாது இருப்பதுடன் குறித்த ஆதனங்களிற்கான ஆதன வரியும் செலுத்தப்படாது நிலுவையாக காணப்படுகின்றது. எனவே உரிய ஆதனங்களின் உரிமையாளர்கள்/ பராமரிப்பாளர்கள் எதிர்வரும் 31.05.2025 ஆம் திகதிக்கு முன்னர் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தலைமையலுவலகத்தில் ஆதனங்களின் ஆவணங்களினை சமர்ப்பித்து பதிவுகளை மேற்கொள்வதுடன் ஆதன வரி நிலுவையினையும் செலுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

| தொ.இல | வீதியின் பெயர் | ஆதன இலக்கம் |
|---|---|---|
| 1 | ஆட்டி வெட்டை வீதி | 6,10/4,10/5 |
| 2 | விளையாட்டு மைதான வீதி | 5,5/5,5/6,27,31,47,32,40,44,62 |
| 3 | கொட்டடிப்பிள்ளையார் வீதி | 15 |
| 4 | அரசர் கேணி வீதி | 1/2,3,5,9 |
| 5 | பெரியபளை பிரதான வீதி | 21,10/3 |
| 6 | நரசிம்மை வைரவர் வீதி | 7,9,15,19,23,33,33/1,18,20,22/10,22/18,22/20,30/4 |
| 7 | புகையிரத நிலைய பின் வீதி | 5,15,15/2,17,17/2,19,25,29,8,16,22,26 |
| 8 | புலோப்பளை அல்லிப்பளை வீதி | 9,11/3,15,27,35,41,43,49,51,57,59,71,73,79,6,24/3,24/4,24/5,48/1,52,54,56,76 |
| 9 | புலோப்பளை மேற்கு தேவாலய வீதி | 15,29/1,37/3,37/14,47/1;49,51,55,57,30/1,30/9,30/11,30/15,30/19,42,42/5,44,50/1,50/3,50/5,50/6,50/9,50/10,50/11,50/12,52,54,56 |
| 10 | புலோப்பளை மேற்கு வீதி | 5,7,11,8,20 |
| 11 | அத்தாய் வீதி | 29,35,2,8,10 |
| 12 | தட்டாதெரு வீதி | 17,21/2,27,20,30 |
| 13 | புலோப்பளை செல்வபுரம் வீதி | 5,9,17,33,35,61,65/2,75,89,95,103,103/1,105,121,151,10,16,20,82,126,132, |
| 14 | புலோப்பளை கச்சார்வெளி வீதி | 47/7,49,53/11,53/12,53/17,53/32,53/34,91,97,6,16,18,28,32,38,44,48,90 |
| 15 | செல்வபுரம் அல்லிப்பளை இணைப்பு வீதி | 27,24 |
| 16 | செல்வபுரம் வீட்டுத்திட்ட வீதி | 12/5,12/8 |
| 17 | கச்சார்வெளி பிரதான வீதி | 3,5,7,4,6,34 |
| 18 | புலிவளைஞ்சான் வீதி | 7 |
| 19 | பண்டமாவடி சின்னத்தாளையடி வீதி | 3,9,29,31,35 |
| 20 | பேருந்து நிலைய வீதி | 9,2,4,6,8,18,20 |
| 21 | இன்னாசி வீதி | 1,5,7,7/2,7/3,15 |
| 22 | பெரியபளை 3ம் குறுக்கு வீதி | 7,2/1 |
| 23 | குஞ்சுக்குளம் வீதி | 5,15,14,16,18,20 |
| 24 | காளி கோவில் வீதி | 15,14 |
| 25 | முனியப்பர் கோவில் வீதி | 7,11,15,17,19,21,23,25,27,29,33,35,18,22,24,26 |

| தொ.இல | வீதியின் பெயர் | ஆதன இலக்கம் |
|---|---|---|
| 26 | விளையாட்டு மைதானம் முதலாம் குறுக்கு வீதி | 9,17/2,17/4,17/5,19 |
| 27 | பொலிஸ் நிலையம் பின் வீதி | 3,5/3,6 |
| 28 | இன்னாசித்தோட்டம் முதலாம் குறுக்கு வீதி | 3/1,11 |
| 29 | பெரியபளை வடக்கு வீதி | 8,14,20,1,2,8/1,8/4,12,14· |
| 30 | வைரவர்கோவில் வயல் வீதி | 7,11,2,4,8,12,14 |
| 31 | மயூரா வீதி | 15/1,4,8 |
| 32 | கொம்புவளைவு வீதி | 7/2,7/3,9 |
| 33 | தம்பித்துரை வீதி | 11,17,23,23/2,12,16,22,24,26 |
| 34 | ராசாதோட்டக்கரை வீதி | 5,17,23,4,8,12,14,16,20,24,26 |
| 35 | கச்சார்வெளி உள்ளக வீதி | 57/2,57/3,66,66A |
| 36 | அருணாசலம் வீதி | 18 |
| 37 | யாழ் வீதி | 51,55,57,81,6/1,8,10,12,38,52/1.1,54/2,76,88,100,144,190/3,230,260,264,270,272,284 |
| 38 | புதிய வீதி -கச்சார்வெளி | 15/1 |
| 39 | புதிய வீதி 1ம் குறுக்குத்தெரு-கச்சார்வெளி | 3,5,7,9 |
| 40 | புதிய வீதி 2ம் குறுக்குத்தெரு-கச்சார்வெளி | 3,7,8,10 |
| 41 | புதிய வீதி 3ம் குறுக்குத்தெரு-கச்சார்வெளி | 5 |
| 42 | புதிய வீதி 4ம் குறுக்குத்தெரு-கச்சார்வெளி | 9,6,8,10 |
| 43 | புதிய வீதி 5ம் குறுக்குத்தெரு-கச்சார்வெளி | 3,4,6,8,10 |
| 44 | செல்வபுரம் குறுக்கு வீதி | 3,7,9/1,9/2,9/3,2,8,14 |
| 45 | தம்பகாமம் வீதி | 3,4/1,6,14,20,26 |
| 46 | கண்டி வீதி | 51,55,91,101,105/1,105/3,46,50/15,50/18,50/20,80,82,84,90,96, 100 |
| 47 | புலோப்பளை பிரதான வீதி | 3/2,23,25,25/1,31,33,45,49/2,49/4,6,8/1,12,24,50,52,52/1,52/1,52/2,52/3,52/4,52/5,52/6,54,56,58,60,60/1,60/2,66,70,86,90,96,100,106,114,124/3,124/4,124/6,124/8,124/10,124/11,124/12,134,142,144,160,170,180,190 |
| 48 | ஸ்ரேசன் வீதி | 56 |
| 49 | புகையிரத நிலைய வீதி | 9,11,15,43 |

திருமதி.த.தர்சினி, செயலாளர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை.

12.05.2025

# தலைமறைவாகியுள்ள பாதாள உலகக் குழுத்தலைவர்களை
## விரைந்து கைதுசெய்ய நடவடிக்கை

(கொழும்பு)

நாட்டை விட்டு வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்று தலை மறைவாகியிருக்கும் 10 பிரபல பாதாள உலகக் குழுத் தலைவர்களை விரைவாகக் கைது செய்வதற்காக இலங்கைப் பாதுகாப்புத் தரப்பு சர்வதேச ரீதியில் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் சமீபத்தில் நடந்த பல கொலைச் சம்பவங்களில் அவர்களும் அவர்களது குழுக்களும் நேரடியாக ஈடுபட்டிருப்பதால் இந்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, அவர்களின் உண்மையான கடவுச் சீட்டுகள் மற்றும் போலிக் கடவுச் சீட்டுக்கள் தற்போது பொலிஸாரால் பெறப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், சர்வதேச உளவாளிகள் மூலம் அவர்களைப் பற்றிய உளவுத்துறை தகவல்கள் பெறப்படுவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (6-8)

# வட- கிழக்கில் கூட்டாட்சி அமைக்க பேச்சுவார்த்தை
## அமைச்சர் விஜித ஹேரத்



(கொழும்பு)

வடக்கு மற்றும் கிழக்கு உள்ளூராட்சி மன்றங்களில் கூட்டாட்சியை ஏற்படுத்துவது குறித்து தேசிய மக்கள் சக்தி பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து வருவதாக வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

தென்னிலங்கை ஊடகமொன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில், இதுவரையில் முன்னெடுக்கப்பட்ட கலந்துரையாடல்கள் வெற்றியளித்துள்ளதாகவும் தேசிய மக்கள் சக்தியுடன் ஒன்றிணைந்து பயணிப்பதற்கு வடக்கு, கிழக்கு அரசியல் தரப்புகள் இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் நாடு முழுவதும் பெறப்பட்ட மொத்த வாக்குகளின் எண்ணிக்கை அடிப்படையில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அதிகபடியான வாக்குகளைப் பெற்றுள்ளது.

ஆனால் வடக்கு மற்றும் கிழக்கில் பின்னடைவுகளை சந்தித்துள்ளதுடன், தென்னிலங்கையிலும் ஒரு சில உள்ளூ ராட்சி மன்றங்களில் தனித்து ஆட்சியமைப்பதற்கு பெரும்பான்மை இல்லாத நிலை உள்ளது.

இவ்வாறானதொரு நிலையில் வெற்றிபெற்ற சுயேட்சைக் குழுக்கள் உள்ளிட்ட சில அரசியல் கட்சிகளுடன்ஒன்றிணைந்து உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சியமைப்பது தொடர்பில் தேசிய மக்கள் சக்தி பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து வருகிறது. (6-8)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## தயிர்





டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

பாலில் இருந்து துவையவைக்கப்பட்டது தயிராகும். பசுவின் பாலில் லக்ரோபசிலஸ் எனும் கிருமியானது பால் தயிராகும் போது நொதித்து அந்தக் கிருமியானது லக்டிக் அமிலமாக மாறுகிறது. இதனால் தான் தயிர் கெட்டியாகவும், புளிப்புத் தன்மையுள்ளதாகவும் மாறுகிறது. இந்தத் தயிரானது ஆரோக்கியத்திற்கு மிகவும் பயன் உள்ளதாகும். தயிரைப் புரை ஊற்றி பன்னிரண்டு மணி நேரத்தில் பயன்படுத்த வேண்டும்.

அப்போது தான் நன்மை பயக்கும். பக்றீரியா செறிவாகக் காணப் படும். பன்னிரண்டு மணி நேரத்தின் பின் தயிர் கெட ஆரம்பிக்கும். நன்மை பயக்கும் பக்ரீறியாக்களின் எண்ணிக்கையும் குறைய ஆரம்பிக்கும். பெரும்பாலும் பசுவின் பால் ஒத்துக் கொள்ளாதவர்கட்கு தயிரும் ஒத்துக் கொள்ளாது.

பாலில் இருக்கும் அதே லக்ரோ பசிலஸ்தான் தயிரிலும் காணப்படும். எனவே பால் ஒத்துக் கொள்ளாதவர்கள் தயிரையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும். உணவைச் செரிமானம் செய்வதற்கு தேவையான புரோ பயற்றிக்ஸ் எனும் நல்ல பக்றீரியாக்கள் தயிரில் அதிகம் காணப்படும். எனவே சித்த மருத்துவத்தில் பேதி மருந்துகள் மற்றும் பெரு மருந்துகள் பயன்படுத்தும் போது தயிர் பத்திய உணவாகப் பயன்படுத்தப்படுகிறது. அல்லது சித்த மருத்துவத்தில் குழந்தைகள் உட்பட நோய் வாய்ப்பட்டவர்கட்கு பயன்படுத்தும் உணவுகளில் இட்லி, இடியப்பத்துடன் தயிர் கலந்து பயன்படுத்த அறிவுறுத்தப்படுகின்றது. கழிச்சல், சீதபேதி, இரத்த பேதி போன்ற நிலைமைகளில் கூட தயிர் சேர்த்து தயாரிக்கப்படும் பஞ்ச லவணக் கறுப்பு மருந்து பயன்படுத்தப்படுகிறது. ஏனெனில் கழிச்சல் போன்ற நிலைமைகளில் நல்ல கிருமிகள் வெளியே போய் விடும். இதனால் தான் பசி இருக்காது. உணவு செரிமானம் அடையாது. வயிற்று வலி போன்றன ஏற்படும். இந்த வயிற்று வலியானது கழிச்சல் நின்ற பின்பும் தொடர்ந்து 2, 3 நாட்கள் காணப்படும். ஏனெனில் நல்ல கிருமிகள் குடலினுள் இல்லை. இந்த நேரம் தயிரைப் பயன்படுத்தும் போது நல்ல கிருமிகளான புரோ பயற்றிக்ஸ் கொஞ்சம் கொஞ்சமாகக் குடலில் உற்பத்தியாகி வயிற்று வலியும் குறைய ஆரம்பிக்கும். தயிரில் அதிகமான கல்சியம், மக்னீசியம் சத்துக்களும் உண்டு. என்புகள், பற்களைப் பலப்படுத்தக் கூடியதாக இருக்கும். தினமும் நீங்கள் அளவாகத் தயிர் சாப்பிடலாம். காரமான உணவுகள் எடுக்கும் போது தயிர் சாப்பிட்டால் கார உணவுகளின் தாக்கத்தைக் குடலில் சமப்படுத்தும் ஆற்றலும் தயிருக்கு உண்டு. தயிரில் இருக்கும் இரசாய னச் சத்துக்களால் உடலில் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கச் செய்யும்.

அத்துடன் இதய இயக்கத்திற்கும் சிறந்ததாகும். தயிரில் புரதச் சத்தும் காணப்படுகிறது. தினமும் 250 மில்லி தயிர் தாராளமாக எடுத்துக் கொள்ளலாம். ஏனெனில் அதிலுள்ள சத்துக்கள் உங்கள் உடம்பிற்கு ஒத்துக் கொள்வதைப் பொறுத்தேயாகும். தயிரை இரவில் சாப்பிடலாமா?

சிலருக்குச் சளியை ஏற்படுத்தும் எனக் கருதுகிறார்கள். கிருமிகளால் சளி ஏற்படுபவர்கள் தயிரை பயன்படுத்தலாம். ஆனால் சிலருக்கு ஒவ்வாமையால் சளி ஏற்படுபவர்கள் தயிரைத் தவிர்த்துக் கொள்ளல் வேண்டும். தயிரில் விற்றமின் B12, ரைபோபிளேவின் காணப்படுகிறது.

இது இரத்த விருத்திக்கும் நரம்புகளின் செயற்பாட்டிற்கும் அவசியமானதாகும். பெரும்பாலும் தேனும், தயிரும் கலந்து சாப்பிடுவார்கள். இதுவும் ஆரோக்கியத்திற்கு உகந்தது. இதில் புரதச்சத்து அதிகமாகக் கிடைக்கும். அத்துடன் கல்சியம், புரோ பயிற்றிக்ஸ் போன்ற சத்துக்கள் தேனிலும் காணப்படும். அத்துடன் இரண்டையும் சேர்த்து எடுக்கும் போது உடலிற்கு தேவையான நுண் போசணைக் கூறுகள் சம அளவில் கிடைக்கிறது.

தயிரைச் சரியான முறையில் உணவில் சேர்த்துக் கொண்டால் உடல் எடையைக் குறைக்கலாம்.

எனவே உடற்பருமன் ஏற்படும் அபாயத்தைக் குறைக்கிறது. இது மன அழுத்த ஹோர்மோன் கோர்டிசோலைக் குறைக்க உதவுகிறது. அதேபோல சிலர் தயிரைப் பழங்களுடன் சேர்த்துச் சாப்பிடுவார்கள். குறிப்பாக சிட்ரஸ் பழங்களைச் சேர்பபதால் அதிக அமிலத் தன்மை ஏற்படுகிறது.

எனவே அத்தகைய கலவையைத் தவிர்க்க வேண்டும். குறிப்பாக உணவு உண்ணும் போது அதிகமாகத் தண்ணீர் குடிப்பதும், சாப்பிட்ட உடனே உறங்கச் செல்வதும் செரிமானப் பிரச்சினைகளை உண்டாக்கும். எனவே இது போன்ற சிரமங்களைத் தவிர்க்க உணவில் தயிர் சேர்த்தாலே போதும். தயிரில் உள்ள புரோபயற்றிக்குகள் செரிமானத்திற்கு உதவுவதுடன் செரிமான பிரச்சினைகளையும் தடுக்கிறது.

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர்

769





"வீடு வாசலும் பதவியும் அந்தஸ்தும் அற்ற அந்த அநாதைப் பையனை மறந்துவிடு!" என்று கூறலானான். தஞ்சாவூர்ச் சிம்மாசனத்தில் அவளை ஏற்றி வைக்கத் தீர்மானித்திருப்பதாக ஆசை காட்டினான். பின்னர் ஒரு நாள், தெளிவாகவே விஷயத்தைச் சொல்லி விட்டான். ஏற்கனவே சின்னப் பழுவேட்டரையரின் மகளை மணந்தவனான மதுராந்தகனுக்கு இவளையும் மணம் புரிந்து கொடுக்கப் போவதாகவும் கூறினான். மதுராந்தகன் தான் அடுத்த சக்கரவர்த்தியாகப் போகிறான் என்று ஜாடைமாடையாகச் சொன்னான். மதுராந்தகனை மணந்தால் மூன்று உலகங்களுக்கும் மணிமேகலை சக்கரவர்த்தினியாக விளங்குவாள் என்றும், அவள் வயிற்றில் பிறக்கும் பிள்ளையும் ஒருவேளை சாம்ராஜ்யம் ஆளும் பேறு பெறுவான் என்றும் கூறினான். இதற்கெல்லாம் அவளுடைய பெற்றோர்களும் ஒத்துப் பாடினார்கள்.

ஆனால் மணிமேகலைக்கு இந்தப் பேச்சு ஒன்றும் பிடிக்கவில்லை, வந்தியத்தேவனைப் பற்றிக் கேட்டுக் கேட்டு அவள் மனம் அவனிடம் ஈடுபட்டிருந்தது. அது மட்டுமல்ல மதுராந்தகன் வீரமற்றவன் என்றும், போர்க்களத்தையே பார்த்து அறியாதவன் என்றும், நேற்று வரை உடம்பெல்லாம் விபூதி பூசி உருத்திராட்சம் அணிந்து சாமியார் ஆகப் போவதாகச் சொல்லி வந்தவன் என்றும் அறிந்திருந்தாள். போதாதற்கு ஏற்கனவே அவனுக்கு ஒரு திருமணம் ஆகியிருந்தது. தஞ்சாவூர் அரண்மனைப் பெண்களோ மிகவும் கர்வக்காரிகள். தங்களுக்குத்தான் நாகரிகம் தெரியும் என்று எண்ணி மற்ற ஊர்க்காரர்களை அலட்சியம் செய்கிறவர்கள். இதையெல்லாம் எண்ணி மணிமேகலை மிக்க எரிச்சல் கொண்டாள். தஞ்சாவூர்ச் சிம்மாசனம் கிடைப்பதாயிருந்தாலும் சரி, தேவலோகத்துத் தேவேந்திரனுடைய சிம்மாசனமே கிடைப்பதாயிருந்தாலும் சரி, மதுராந்தகனை மணந்து கொள்ள முடியாது என்று அடம்பிடித்தாள்.

அப்புறம் இன்னொரு செய்தி தெரிய வந்தபோது அவளுடைய மன உறுதி வலுவடைந்தது. பெரிய பழுவேட்டரையர் கடம்பூருக்கு வந்திருந்தபோது பின்னோடு இளையராணி நந்தினியும் வந்திருந்ததாகச் சொன்னார்கள். ஆனால் அவள் அந்தப்புரத்துக்குள்ளேயே வரவில்லை. கடம்பூர் அரண்மனைப் பெண்களைப் பார்க்கவும் இல்லை. இது முதலில் வியப்பை அளித்தது. அரண்மனைப் பெண்டிர் அதைப் பற்றி பரிகாசமாகவும் நிந்தனையாகவும் பேசிக் கொண்டார்கள். பிறகு கொஞ்சம் கொஞ்சமாக உண்மை தெரிந்தது. மூடுபல்லக்கில் இளையராணி வரவில்லையென்றும் மதுராந்தகன் வந்திருந்தான் என்றும் அறிந்தபோது மணிமேகலையின் அருவருப்பு அதிகமாயிற்று. "சீச்சீ! இப்படிப் பயந்து கொண்டு மூடுபல்லக்கில் பெண் வேடம் தரித்துக் கொண்டு வருகிறவனையா நான் மணவாளனாக வரிப்பேன்? ஒருநாளும் இல்லை!" என்று மணிமேகலை உறுதியடைந்தாள்.

மதுராந்தகன் மூடுபல்லக்கில் அரண்மனைக்கு வந்திருந்த அதே சமயம் கந்தமாறனின் சிநேகிதன் வந்தியத்தேவனும் வந்திருந்தான்.

அவன் அந்தப்புரத்துக்கு வந்து சற்று நேரம் தான் இருந்தான். எங்கிருந்தோ அப்போது மணிமேகலைக்கு அளவிலாத நாணம் வந்து பற்றிக் கொண்டது. மற்றப் பெண்களின் பின்னாலேயே நின்றாள்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## சோழ நாட்டு வீரச்சிறுவன்



சோழநாட்டை குலோத்துங்கன் என்ற மன்னர் சீரும் சிறப்புமாக ஆண்டு வந்தார். இவர்தான் "சுங்கம் தவிர்த்த சோழன்" என்று வரலாற்றில் பேசப்படும் மன்னர். சோழ மரபிற்கு ஒரே வாரிசு.

குலோத்துங்கன் ஆட்சியில் கல்வியில் சிறந்த புலவர்கள் அரசனை நாடிப் பொன்னும் பொருளும் பெற்றுச் சென்றனர். அதே போல் வீரர்கள் தங்கள் வீரத்தைக் காட்டிப் பரிசுகள் பல பெற்றனர்.

நாடெங்கிலும் திருவிழாக்கள் கோலாகலமாய் நடந்தன. மன்னர் செங்கோல் தவறாது ஆட்சி நடத்தி வந்தார்.

அக்காலத்தில் கடோத்கஜன் என்ற மாளவ நாட்டு மல்லன் ஒருவன் நாடெங்கும் போரிட்டு வெற்றிக்கொடி நாட்டி வந்தான். வட இந்தியாவில் பல மல்லர்களை ஜெயித்த அவன் தென்னகத்திற்கும் விஜயம் செய்தான்.

மற்போரில் மட்டுமல்லாமல், வில்வித்தைகளிலும், வாட்போரிலும் வாகை சூடிவந்தான். அவன் பெயரைக் கேட்ட மாத்திரத்திலேயே வீரர்கள் நடுநடுங்கினர்.

அவனை எதிர்த்துப் போரிட்டுத் தோற்ற வீரர்களின் தலைகளை மொட்டை அடித்து அவர்களைத் தன் அடிமைகளாக்கினான். தான் செல்லும் தேசங்கள் தோறும் அவர்களைப் பரிவாரங்களாக அழைத்துச் சென்றான். அதனால் சிறந்த வீரர்களும் கூட அவனை எதிர்க்க அஞ்சினர்.

சோழநாட்டிற்கு வந்த அவன் மன்னன் குலோத்துங்கனைக் கண்டு "என் சவாலை ஏற்கக் கூடிய வீரர்கள் உம் நாட்டில் உள்ளனரா?" என்று ஆணவத்துடன் கேட்டான்.

மன்னன் பறை முழங்கி வீரர்களுக்கு இச்செய்தியை அறிவித்தார். சோழநாடு வீரத்தில் என்றும் சோடை போனதில்லை. வீரர்கள் பலர் திரண்டனர். விற்போருக்கும், மற்போருக்கும் நாட்கள் குறிக்கப்பட்டன.

அன்று அரண்மனை மைதானத்தில் மன்னர் முன் ஆயிரக்கணக்கானோர் கூடினர். போட்டி ஆரம்பமாயிற்று.

முதல் நாள் வாட்போர் பத்துக்கும் மேற்பட்ட சோழ நாட்டு வீரர்கள் கடோத்கஜனிடம் வரிசையாகத் தோற்றனர். அவர்களால் பத்து நிமிடம் கூட தாக்குப்பிடிக்க முடியவில்லை.

தோற்ற வீரர்களை கடோத்கஜனின் ஆட்கள் கூடாரத்திற்கு இழுத்துச்சென்று உடனுக்குடன் மொட்டை போட்டு அவமானப்படுத்தி அடிமையாக்கினர்.

மறுநாள் மற்போர் சோழநாட்டின் மானத்தைக் காக்க வீரன் ஒருவன் இன்றாவது வருவானா என்று மன்னன் ஏங்கிக் கொண்டிருந்தார்.

(தொடரும்...)

அமைதியாக வாழ்க்கையை உற்று நோக்கும் போது மற்றவரின் தேவைகளை எளிதாக உணர முடிகிறது.

– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## உள்ளூராட்சி சபைகள் மூலம் அடிப்படை வசதிகளை ஏற்படுத்துங்கள்

உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுற்று பெறுபேறுகள் அறிவிக்கப்படலாயிற்று.

இனி ஆட்சி அமைப்பது தான் ஆக வேண்டிய காரியம். ஆட்சி அமைப்பது தொடர்பில் ஏதோ ஒரு வகையில் தமிழ்த் தரப்புகள் இணக்கப்பாட்டை எட்ட வேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. தொடர்ந்தும் ஒற்றுமைப்படுங்கள் என்று நாம் கூறிக் கொள்வது பொருத்தமற்றது.

ஏனெனில் நாம் ஒற்றுமைப்படத் தவறுவோமாயின், இயற்கை அதற்கான தண்டனையைத் தருவதற்குத் தயாராகவே இருக்கிறது.

இது ஒரு புறம் இருக்க இப்போது நாம் பேச வேண்டிய விடயம், மக்களால் தெரிவு செய்யப்பட்ட சபைகள் ஆற்ற வேண்டிய பணிகளும் கடமைகளும் ஆகும்.

பொதுவில் 7 ஆண்டுகளுக்குப் பின்னர் உள்ளூராட்சி சபைக்கான தேர்தல் நடைபெற்றுள்ளது. அது வரையில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஆட்சி இல்லாமல் அரச நிர்வாகம் சார்ந்த அதிகாரிகளினால் சபைகள் இயக்கப்பட்டன.

இவ்வாறு சபைகள் இயங்குவது என்பது மிகவும் கடினமானது. பொதுவில் உள்ளூராட்சி சபைக்குரிய பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் மக்களால் தெரிவு செய்யப்பட்ட சபைகளுக்குரிய அதிகாரங்களுடன் செயற்படவும் தீர்மானங்களை எடுக்கவும் முடியாது.

அதேநேரம் அவ்விதம் செயற்பட்டு வில்லங்கத்தை விலைக்கு வாங்குவானேன் எனக் கருதி தத்தம் கடமைப்பாடுகளை மட்டுப்படுத்திக் கொள்பவர்களும் உளர்.

இந்நிலையில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட மக்கள் சபை ஒரு அரசாங்கம் போல செயற்படும் அதிகாரத்திற்குட்பட்டது.

எனவே ஒவ்வொரு பிரதேச, நகர, பட்டின, மாநகர சபைகளும் தத்தம் எல்லைக்குட்பட்டு தமக்கு இருக்கக்கூடிய அதிகாரங்களைப் பயன்படுத்தி மக்களுக்கு வழங்க வேண்டிய அத்தனை வசதிகளையும் செய்து கொடுப்பது கட்டாயமானது.

உண்மையைக் கூறப்போனால், எங்கள் தமிழர் தாயகத்தில் இன்னமும் எத்தனையோ வீதிகள், ஒழுங்கைகள் செப்பனிடப்படாமல் குன்றும் குழியுமாக இருக்கின்றன.

அதேபோல மழைக்காலத்தில் வெள்ளம் தேங்கிக் கிடப்பதால், ஏற்படுகின்ற அசௌகரியம் கொஞ்சம் அல்ல. சுருங்கக் கூறப்போனால், வீதிகள் புனரமைப்பட்டபோது அவை உயர்த்தப்பட, வீடுகள் தாழ்ந்து போயின. இதன் காரணமாக மழை காலத்தில் வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்து நிலைமையை அசாதாரணமாக்கி விடுகிறது. இதேபோன்று தெரு நாய்களின் தொல்லைகளும் தெருக்களில் குப்பைகளைக் கொட்டுகின்ற நிலைமைகளும் சீரற்ற வடிகால்களும் பெரும் பிரச்சினையாக உள்ளன.

இவற்றுக்கும் மேலாக, பொதுக்குளியலறைகள் அவற்றின் பராமரிப்புகள் தெரு மின் விளக்குகள் எனப் பல விடயங்கள் தொடர்பில் உள்ளூராட்சி சபைகள் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

இதற்கும் மேலாக அனுமதியற்ற கட்டடங்கள் சுற்றுமதில்களால் ஏற்படக்கூடிய சிக்கல்கள், வீதிகளின் விஸ்தீரனத்தைக் குறைக்கும் வகையில் குடியிருப்பாளர்கள் முன்னெடுக்கின்ற ஆக்கிரமிப்புகள் எனப் பல்வேறு விடயங்களில் உள்ளூராட்சி சபைகள் அதிரடியான வேலைத் திட்டங்களை முன்னெடுக்க வேண்டும். இதுவே இன்றைய அவசிய அவசரத் தேவையாகும்.

## உறவுகளின் வலியை உணர்ந்தவன் நான் என்ற அநுர கூட எமக்கான தீர்வுகள் எதனையும் முன்வைக்கவில்லை

### தமிழின அழிப்பு நினைவு வாரத்தில் உறவுகள் ஆதங்கம்

(அம்பாறை)

ஜனாதிபதியாக வருவதற்கு முன்னர் தனக்கும் காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் வலி தெரியும் எனக் கூறிய அநுரகுமார திஸாநாயக்க இதுவரை வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு என்ன செய்யலாம், என்ன செய்ய முடியும் என்ற தீர்மானம் எதையும் மேற்கொள்ளவில்லை.

அன்று ஒரு நாள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தைத் தடை செய்வேன் அல்லது இல்லாமல் செய்வேன் என்று கூறியவர் இன்று வரை அதற்கான எந்த ஒரு ஏற்பாடுகளையும் செய்யவில்லை என வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கச் செயலாளரும் அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத் தலைவவியுமாகிய தம்பிராசா செல்வராணி தெரிவித்தார்.

முள்ளிவாய்க்கால் இனவழிப்பு வாரத்தை முன்னிட்டு அம்பாறை மாவட்டம் பாண்டிருப்புப் பகுதியில் நேற்று (11) நடைபெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

ஆரம்பமாகியுள்ள முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தினை வடக்கு கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் மற்றும் அனைத்துப் பொதுமக்களும் இணைந்து உணர்வு பூர்வமாக மேற்கொள்ள ஒன்றிணைய வேண்டும்.

இந்நிகழ்வானது ஓர் இனம் அழிந்த, இரத்த ஆறு ஓடிய நாளாகவும் எங்கள் உறவுகள் குடும்பம் குடும்பமாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட நாளாக அனுஷ்டிக்கும் ஒரு முக்கியமான நாளாகும்.

இப்போது ஆட்சிக்கு வந்துள்ள அநுர அரசு பற்றியும் எமக்கு எவ்வாறான தீர்வுகளைத் தருவார்கள் என்றும் எமது இளைஞர்களுக்கு இதுவரை தெரியாது. ஆனால் எங்களுக்கு அவர் குறித்துத் தெரியும். கடந்த காலங்களில் எத்தனை ஜனாதிபதிகளை நாங்கள் கடந்து வந்திருக்கின்றோம். எத்தனை அரசாங்கங்களைக் கடந்து வந்திருக்கின்றோம். ஆனால் எங்களுக்கு எந்த விதமான ஒரு தீர்வும் கிடைக்கவில்லை. அதன் பிற்பாடு தான் நாங்கள் இன்று சர்வதேசத்தை நாடி இருக்கின்றோம்.

மீண்டும் ஓ.எம்.பி.ஐ எங்களிடம் முன்வைக்கிறார்கள். எங்களுக்கு இந்த உள்ளகப் பொறிமுறை வேண்டாம். முள்ளிவாய்க்காலில் எமது தமிழினம் அழிவினைச் சந்தித்திருக்கின்றது.

இத்தினத்தில் இவ்வாறு அஞ்சலி செலுத்துவது ஊடாக முள்ளிவாய்க்காலில் தொலைந்த தீர்வினை நாங்கள் எதிர்காலத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.

ஆகவே அனைவரும் ஒன்று திரண்டு இந்த முள்ளிவாய்க்கால் தினத்தில் அஞ்சலி செலுத்த முன் வர வேண்டும் என்றார். (ம-4,7)

## மோதல்கள் நாட்டில் பொருளாதார வளர்ச்சியைப் பாதித்து விடக்கூடாது

### இலங்கையை உதாரணம் காட்டி இந்தியாவில் கருத்துரைத்தார் முன்னாள் ஜனாதிபதி ரணில்

(பெங்களூர்)

இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையேயான யுத்தத்தால் இந்தியாவின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து விடக்கூடாது என முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இலங்கையின் உள்நாட்டுப் போரினை உதாரணம் காட்டி எடுத்துரைத்துள்ளார்.

இரண்டு நாள் விஜயமாக இந்தியா சென்றுள்ள ரணில் விக்கிரமசிங்க பெங்களூரில் இடம் பெற்ற சிறப்பு நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு கருத்துரைக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்துரைத்த அவர்,

பாகிஸ்தானால் குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்படும் என்ற அச்சத்தால் இந்தியாவில் முதலீடு செய்ய ஐரோப்பிய முதலீட்டாளர்கள் தயங்குகின்றனர்.

இந்நிலைமை இலங்கையின் உள்நாட்டுப் போரின் போதும் ஏற்பட்டது. ஆனாலும் இலங்கையின் தேசிய பொருளாதாரம் வளர்ச்சிப் பாதையிலேயே சென்றது.

மறுபுறம் பாகிஸ்தானும் மோதல்கள் ஊடாக ஏற்படும் பொருளாதார நெருக்கடிகள் வேலையின்மை தொடர்பில் கவனத்தில் கொள்ளாவிடின் பங்களாதேஷின் நிலைக்குத் தள்ளப்படும்.

பயங்கரவாதம்முடிவுக்குக்கொண்டுவரப்பட வேண்டும் ஆனால்மோதல் ஒரு நாட்டின் வளர்ச்சியைத் தடுத்து விடக்கூடாது என்றார். (ம-4,7)

## மதுபோதையில் பேருந்தை செலுத்திய சாரதி கைது

### பயணிகள் அருந்தப்பு

(பண்டாரகம)

மது போதையில் பயணிகள் பேருந்தை செலுத்திய ஓட்டுநர் ஒருவர் பண்டாரகம கெலனிகம பகுதியில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்தச் சந்தர்ப்பத்தின் போது பேருந்தில் 50க்கு மேற்பட்ட பயணிகள் பயணித்துள்ள நிலையில் பொலிஸாரின் கைது நடவடிக்கையால் அசம்பாவிதங்கள் தவிர்க்கப்பட்டது.

பாணந்துறை - ஹொரணப் பகுதிக்கு செல்லும் தனியார் பேருந்து ஓட்டுநர் ஒருவரையே பேருந்து பாதுகாப்பற்ற வகையில் பயணிப்பதாக வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில பொலிஸார் கைது செய்துள்ளனர்.

விசாரணைகளின் பின் கைது செய்யப்பட்ட ஓட்டுநர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று கொத்மலைப் பகுதியில் இடம்பெற்ற பேருந்து விபத்தில் 22 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-4,7)

### இலங்கை மின்சார சபைக்குள்

## வெளியாட்களின் தலையீடு பதவி துறந்தார் தலைவர்!

இலங்கை மின்சார சபையில் மின்சாரக் கட்டணம் மற்றும் இதர விவகாரங்களில் வெளியாட்களின் தலையீடு காரணமாகத் தனது பதவியை ராஜினாமா செய்ய முடிவு செய்துள்ளதாக இலங்கை மின்சார சபையின் தலைவர் திலக் சியம்பலாபிட்டிய, மின்சக்தி எரிசக்தி அமைச்சருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

நாட்டின் மின்சாரக் கட்டணத்தை 25 முதல் 35 சதவீதம் வரை அதிகரிப்பது குறித்து இலங்கை மின்சார சபை பரிசீலித்து வருவதாக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, சபை சர்வதேச நாணய நிதியத்திற்கும் இலங்கைக்குமிடையில் எட்டப்பட்ட பணியாளர் ஒப்பந்தத்திற்கு ஒப்புதல் பெற நிர்வாகக் குழுவை வழிநடத்துவதற்கு முடிக்க வேண்டிய இரண்டு படிகளில் ஒன்று மின்சார உற்பத்திச் செலவை மீட்டெடுக்கக்கூடிய ஒரு கட்டண முறையை அறிமுகப் படுத்துவதாகும்.

இந்நிலையில் மின்சாரக்கட்டணத்தை திருத்துவதற்கான பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வரும் நிலையில், இலங்கை மின்சார சபையின் தலைவர் திலக் சியம்பலாபிட்டிய தனது ராஜினாமா கடிதத்தை சமர்ப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-4,7)

# குருப்பெயர்ச்சிப் பலன்கள்

## 11.05.2025 முதல் 26.05.2026 வரை

45/100



மேஷ இராசி வாசகர்களே!

இதுவரை உங்கள் இராசிக்கு 2ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த குருபகவான் 11.05.2025 அன்று 3ஆம் இடத்திற்குப் பெயர்ச்சியாகிறார்.

அந்த இடம் சகாய ஸ்தானம் என்பதால் அனைத்து வழிகளிலும் முன்னேற்றம் கிடைக்கும். ஏழரைச் சனியின் ஆதிக்கம் வந்தாலும் அதில் நன்மை கிடைக்கும் விதத்தில் குருவின் சஞ்சாரம் கை கொடுக்கும்.

புனிதமடைகின்றன. குருவின் பார்வை 7ஆம் இடத்தில் பதிவதால் சப்தம ஸ்தானம் பலம் பெறுகின்றது.

எனவே இதுவரை திருமணம் கைகூடவில்லையே என்று கவலைப்பட்டவர்களுக்கு அது கை கூடும். இல்லறம் நல்லறமாக அமைய குரு கவசம் பாடி குரு பகவானை வழிபடுவது நல்லது.

குருவின் பார்வை 9ஆம் இடத்தில் பதிவதால் தந்தை வழி உறவில் நெருக்கம் அதிகரிக்கும். அவர்களின் ஆதரவோடு தொழிலைப் பலப்படுத்திக் கொள்வீர்கள். நீடித்த நோயில் இருந்து நிவாரணம் பெறுவீர்கள். வெளிநாட்டிலுள்ள நல்ல நிறுவனங்களிலிருந்து வரும் அழைப்புக்களை ஏற்றுக்கொள்ள முன் வருவீர்கள்.

வளர்ச்சி காண்பீர்கள். என்றைக்கோ குறைந்த விலைக்கு வாங்கிய இடம் இப்பொழுது அதிக விலைக்கு விற்று பல மடங்கு இலாபத்தை கொடுக்கப் போகின்றது. கொடுக்கல்-வாங்கல்கள் சரளமாக இருக்கும். திருவாதிரை




நட்சத்திரக் காலில் ராகு சாரத்தில் குரு பகவான் சஞ்சரிக்கும் பொழுது 10.6.2025 முதல் 7.8.2025 வரை எண்ணற்ற நற்பலன்கள் இல்லம் தேடி வரும். எதிரிகளின் தொல்லை குறையும். எதிர்பார்த்த காரியங்கள் வெற்றிகரமாக நடைபெறும்.

கவனம் தேவை. அலைச்சலைக் குறைத்துக் கொள்வதும், ஆகாரத்தில் கட்டுப்பாடு செலுத்துவதும் நன்மை தரும். மாற்று மருத்துவத்தால் உடல்நலம் சீராகும்.

குருவைப் பொறுத்தவரை இருக்கும் இடத்தைக் காட்டிலும், பார்க்கும் இடத்திற்கே பலன் அதிகம். அந்த அடிப்படையில் தடைப்பட்ட காரியங்கள் தானாக நடைபெறும். புகழ்மிக்க ஆலயங்களுக்குச் சென்று வழிபட்டு வரவேண்டும் என்ற எண்ணம் தோன்றும் விரய ஸ்தானத்தை குரு பார்ப்பதால் வரவுக்கு மீறிய செலவுகள் ஏற்படலாம். எனவே எதையும் திட்டமிட்டுச் செய்வது நல்லது. வீண் விரயங்களில் இருந்து விடுபட சுப விரயங்களை மேற்கொள்ளலாம்.

## மூன்றில் வருகிறது குரு பகவான்! முயற்சிகள் அனைத்திலும் இனி வெற்றி!

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

**குரு இருக்கும் இடத்தின் பலன்**

உங்கள் இராசிக்கு 9, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர், குருபகவான் அவர் 3ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது சகோதர சகாய ஸ்தானம் பலப்படுகிறது. எனவே உடன்பிறப்புகள் உங்களுக்கு உறுதுணையாக இருப்பர். இதுவரை அரசல் புரசலாக இருந்த அண்ணன், தம்பிகளின் உறவு இப்பொழுது சுமுகமாக மாறும். பஞ்சாயத்துக்கள் சாதகமாக முடியும். புதிய வாகனங்கள் வாங்கிப் பயணிக்கும் வாய்ப்பு கைகூடும். மருத்துவச் செலவுகளால் மனக்கலக்கம் ஏற்படலாம். எனவே ஆரோக்கியத்தைப் பேணிப் பாதுகாத்துக் கொள்வது அவசியம். யோகபலம் பெற்ற நாளில் உங்களுக்கு அனுகூலம் தரும் தலங்களைத் தேர்ந்தெடுத்து வழிபட்டு வருவது நல்லது.

**குருவின் பார்வை பலன்**

இந்தக் குருப்பெயர்ச்சியின் விளைவாக குரு பகவானுடைய பார்வை உங்கள் இராசிக்கு 7.9. 11 ஆகிய இடங்களில் பதிகிறது. எனவே அந்த இடங்கள் எல்லாம்

கொடுக்கல்- வாங்கல்களில் திருப்தி ஏற்படும். 11 ஆம் இடத்தைக் குரு பார்ப்பதால் பொருளாதாரம் உச்சநிலை அடையும். உடலும் மனமும் உற்சாகத்துடன் செயற்படும்.

செய்யும் தொழிலை மேம்படுத்த எடுத்த முயற்சி இப்பொழுது பலன் தரும். கொடுக்கல்- வாங்கல்களில் இருந்த ஏற்ற இறக்க நிலை மாறும். இல்லத்திற்குத் தேவையான விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். எதிர்காலத்தைப் பற்றிய பயம் அகலும்.

**நட்சத்திரப் பாதசாரப்படி பலன்கள்**

11.5.2025 முதல் 9.6. 2025 வரை மிருகசீரிடம் நட்சத்திரக் காலில் செவ்வாய் சாரத்தில் குருபகவான் சஞ்சரிக்கும் பொழுது தைரியமும், தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். தளர்ச்சி நீங்கி

புனர்பூசம் நட்சத்திரக் காலில் சுய சாரத்தில் குருபகவான் சஞ்சரிக்கும்பொழுது 8.8. 2025 முதல் 25.5.2026 வரை உங் கள் எண்ணங்கள் எல்லாம் ஈடேறும். ஞாபகசக்தி அதிகரிக்கும். நல்ல சந்தர்ப்பங்கள் நாளும் இல்லம் தேடி வரும். இக்காலத்தில் மிதுனத்தில் மட்டுமல்லாமல் கடகத்திலும் குரு சஞ்சரிக்கின்றார்.

**குருவின் அதிசாரப் பெயர்ச்சி**

8.10.2025 அன்று குரு பகவான் கடக இராசிக்குப் பெயர்ச்சியாகிச் செல்கிறார். அங்கிருந்து கொண்டு உங்கள் இராசிக்கு 8, 10, 12 ஆகிய இடங்களைப் பார்க்கிறார். குரு உச்சம் பெற்றுப் பார்ப்பதால் மிகுந்த நற்பலன்கள் வந்து சேரும்.

அர்த்தாஷ்டம குருவாக சஞ்சரிப்பதால் ஆரோக்கியத்தில் மிகுந்த

**சனிப்பெயர்ச்சி**

6.3.2026 அன்று சனி பகவான் கும்ப இராசியில் இருந்து மீன இராசிக்குப் பெயர்ச்சியாகிச் செல்கிறார். இப்பொழுது உங்களுக்கு ஏழரைச் சனியில் விரயச்சனி தொடங்குகின்றது. எனவே விரயங்கள் கொஞ்சம் அதிகரிக்கத்தான் செய்யும். வீடு மாற்றங்கள், இடமாற்றங்கள் வருவதை எதிர்கொள்ள நேரிடும். எதையும் திட்டமிட்டுச் செய்ய இயலாது.

**பெண்களுக்கான பலன்கள்**

இந்த குருப்பெயர்ச்சியின் விளைவாக பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். உறவினர்கள் மூலம் புதிய திருப்பங்கள் வந்து சேரலாம். வீடு மாற்றங்களும், இடமாற்றங்களும் உண்டு. கணவன்-மனைவிக் குள் ஒற்றுமை பலப்பட விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. கடக குருவின் சஞ்சார காலத்தில் தாய்வழி ஆதரவு உண்டு. உடன்பிறப்புகள் உங்கள் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர். பிள்ளைகள் வழியில் சுப காரியம் நடைபெறும். பணி புரியும் பெண்களுக்கு உயர்ந்த பொறுப்புகள் கிடைக்கும்.

(தொடரும்)

## ரயில் மோதி...

பிரபாகரன் (வயது-43) என்பவரே உயிரிழந்தவராவார்.

யாழிலிருந்து காலை 6.30 மணியளவில் கொழும்பு நோக்கிப் பய ணித்த புகையிரதமே காலை 7.30 மணியளவில் பளைப் பகுதியில் மோட்டார் சைக்கிளை மோதியதில் இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை பளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,4,316)

## முள்ளிவாய்க்...

நேற்று உணர்வுபூர்வமாகத் தமிழர் தாயகத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் ஆரம்பமாகியது.

இதன் ஓர் அங்கமாக முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் தமிழின அழிப்பு வாரத்தினை முன்னிட்டு மே18 முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கல் நிகழ்வானது நல்லூர் தியாக தீபம் நினைவிடம் முன்பாக நேற்று ஞாயிற்றுக்கிழமை உணர்வுபூர்வமாக ஆரம்பமாகியது.

முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வினைத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் ஆரம்பித்து வைத்தார்.

நேற்று ஆரம்பமாகிய தமிழின அழிப்பு வாரம் எதிர்வரும் 18.05.2025 நிறைவடையும் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7,4)

## 29 வயது...

இளம் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று முன்தினம் மரணமடைந்துள்ளார்.

இதில் சுழிபுரம் மேற்கைச் சேர்ந்த பரஞ்சோதி சதீஸ் (வயது-29) என்பவரே மரணமடைந்தவராவார்.

இவருக்குக் கடந்த மாதம்9ஆம் திகதி திருமணம் நடைபெற்றுள்ளது.

நேற்று முன்தினம் உறவினர் ஒருவர் வழங்கிய விருந்துக்கு இரவு வேளை சென்றுள்ளார். பின்னர் வீடு திரும்பிய நிலையில் தொடர்ந்து வாந்தி எடுத்துள்ளார்.

இதனையடுத்து இவர் சங்கானைப் பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் மரணமடைந்துள்ளார்.

உயிரிழப்புத் தொடர்பான விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனையில் மாரடைப்பால் மரணம் சம்பவித்ததாக அறிக்கையிடப்பட்டுள்ளது. (ம-7,4)

## ஓமந்தையில்...

ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ் விபத்து நேற்று முன்தினம் (10) சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் ஓமந்தை வவுனியா பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயதுடையவர் ஆவார்.

ஓமந்தை நகரில் வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற கப் வண்டி, எதிர்த்திசையில் இருந்து வந்த மோட்டார் சைக்கிள் மற்றும் பாதசாரி மீது மோதியதில் இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்தார்.

சடலம் வவுனியா வைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், விபத்துத் தொடர்பாக கப் வண்டி ஓட்டுநர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஓமந்தைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,4)

## இலங்கைத்...

கட்சியும், சில சபைகளை விட்டுக் கொடுத்து ஏனைய தமிழ்க் கட்சிகள் ஆட்சியமைப்பதற்குரிய வழிவகைகள் தொடர்பில் ஆராய்வதாக தர்மலிங்கம் சித்தார்த்தன் குறிப்பிட்டார்.

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் தலைவர்களுடன் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர், ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பையடுத்தே தர்மலிங்கம் சித்தார்த்தன் ஊடகங்களுக்கு இந்த விடயங்களைக் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் கந்தரோடையில் உள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தனின் இல்லத்தில் நேற்றுக் காலை குறித்த சந்திப்பு நடைபெற்றது.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான த.சித்தார்த்தன், சுரேஸ் பிரேமச்சந்திரன், மு.சந்திரகுமார் உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்.

உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைப்பது தொடர்பாகவும் எவ்வாறு செயற்படுவது என்பது தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

கொள்கை ரீதியாக தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒரே நிலைப்பாட்டில் உள்ளதாகத் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார். (ம-7,4,33)

## தமிழின...

கனடாவின் பிரம்டன் நகரின் சிங்கௌசி பொதுப் பூங்காவில் நேற்று முன்தினம் (10) 4.8 மீற்றர் உயரத்தில் உள்ள குறித்த உருக்கு நினைவுச்சின்னம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

உலகில் இடம்பெற்ற இனப்படுகொலைகளின் துன்பியல் வரலாற்றைக் கூறும் வரலாற்று அடையாளங்களில் ஒன்றாகவும் ஈழத் தமிழ் மக்கள் மீதான இனப்படுகொலையை உலகுக்குக்கூறும் வகையிலும் குறித்த நினைவுச் சின்னம் உருவாக்கப்பட்டுள்ளது.

குறித்த நினைவுச் சின்னம், அரசியல் பிரபலங்கள் மற்றும் பலநூற்றுக் கணக்கான தமிழ் மக்களின் பிரசன்னத்துடன் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

ஈழத்தமிழர்கள் மற்றும் புலம்பெயர் தமிழர்களுக்கு இது ஒரு வரலாற்றுத் தருணமாக மாறியுள்ளது.

மே 18-ஐ தமிழின அழிப்பை நினைவுகூரும் நாளாக கனேடிய பாராளுமன்றம் 2022இல் ஏகமனதாக அங்கீகரித்த பின்னணியில் இந்த நினைவுத் தூபியின் கட்டுமானப் பணிகளின் நிறைவில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த நினைவுச் சின்னத்தை வடிவமைப்பதற்கு போட்டியில் பல்லாயிரக்கணக்கான வடிவமைப்புகள் வந்தன எனினும் இறுதியில் ஒரு வடிவமைப்பு சில திருத்தங்களுடன் வடிவமைப்பு கனேடிய தமிழர்களின் தேசியப் பேரவையால் முன்மொழியப்பட்டு நகர சபையால் அங்கீகரிக்கப்பட்டது.

இந்த நினைவுச் சின்னத்தை சுற்றியுள்ள தூண்கள் யாவும் 1948 இல் இலங்கை சுதந்திரம் பெற்றதிலிருந்து தமிழர்கள் மீது நடத்தப்பட்ட வன் முறைகளுக்கு அடையாளமாக உள்ளன.

அதன் நடுவில் உள்ள கரங்களுடனான உருக்குச் சின்னம் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை பேரவலத்தை நினைவுகொள்ள வைக்கின்றது.

இந்த நினைவுச் சின்ன நிர்மாணத்தை ஆரம்பம் முதல் எதிர்த்த இலங்கை அரசாங்கம் கனடாவில் உள்ள தனது உயர் ஸ்தானிகராலயம் மூலம் இராஜதந்திர அழுத்தங்கள் மற்றும் மிரட்டல்களை விடுத்ததுடன் இது தமிழ் இனப்படுகொலை நினைவுச்சின்னம் என அழைக்கப்படக் கூடாது எனவும் எச்சரித்திருந்தது.

இனப்படுகொலை நினைவுச்சின்னம் எனப் பெயரிடுவதால் இலங்கையில் நல்லிணக்க செயல்முறை சிதையும் என்ற எச்சரிக்கைகள் விடுக்கப்பட்ட போதிலும் தற்போது இது திறந்து வைக்கப்பட்ட வரலாற்றுத் தருணம் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ம-7,4)


மஹஜன சம்பத
திகதி 2025.05.11
சீட்டிழுப்பு இலக்கம் 5828
F 8 4 9 5 9 3
அத சம்பத
F 9 5 9 3
சீட்டிழுப்பு இலக்கம் 403
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2025.05.11
சீட்டிழுப்பு இலக்கம் - 1858
L 06 31 36 78 L
Double Chance 73003

மெகா பவர்
திகதி 11/05/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2176
V 01 06 34 49 63

ஜய JAYA
திகதி 2025.05.11
சீட்டிழுப்பு இலக்கம் 096
A 1 7 2 5

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4070
சீட்டிழுப்பு திகதி 11.05.2025
D 27 42 72 78
D
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.05.11
சீட்டிழுப்பு இலக்கம் 1137
மேடம் 12 28 34 45 மேடம்
10084 39

உத்தியோகபூர்வ முடிவுகள்
11.05.2025 வெற்றி வாரம் 536
ஆங்கில எழுத்து Q
1 4 7 0 7 7
58375
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.37,099,109.60
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2802
சீட்டிழுப்பு திகதி 2025.05.11 தினம் ஞாயிற்றுக்கிழமை
14 48 49 53 Y
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 61,458,546.40

சனிதா
திகதி 11.05.2025 வெற்றி வாரம் 4963
01 63 65 80 L
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 63,413,120.80
73820

சசிரி
681
சீட்டிழுப்பு திகதி 11.05.2025 ஞாயிற்றுக்கிழமை
09 20 35
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 200,000.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4514
சீட்டிழுப்பு திகதி 11.05.2025 தினம் ஞாயிற்றுக்கிழமை
13 44 46 59
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.8,444,883.60
121592

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
M 27 14 43 53 54
1978
11.05.2025
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.574,670,148.80

அத கோடிபதி ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம் : 2628
சீட்டிழுப்பு திகதி : 2025.05.11
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.53,842,229.60
18 33 51 56 X
418643

# மரண அறிவித்தல்

மலர்வு 05 - 09 - 1972



உதிர்வு 10 - 05 - 2025

## திருமதி கிரிதரன் தேன்மொழி

(ஆசிரியர் – திருநெல்வேலி றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை)

புங்குடுதீவு 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியை நிரந்தரவசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. தேன்மொழி கிரிதரன் அவர்கள் 10.05.2025 சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஷ்ணன் - நாகபூசணி (ஓய்வுபெற்ற ஆசிரியை) தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - சற்குணதேவி தம்பதியரின் அன்பு மருமகளும் கிரிதரன் (கணக்காளர், கோப்பாய் பிரதேச செயலகம்) அவர்களின் அன்பு மனைவியும் அனுசாகர் (IT - மொரட்டுவப் பல்கலைக்கழகம்), சைந்தவி (யா/வேம்படி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத்தாயாரும், அமரர் பகீரதன், Dr. ஸ்ரீபாஸ்கரன் (இரத்தவங்கி தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலை) ஆகியோரின் அன்புச் சகோதரியும் முகுந்தன் (ஜேர்மனி), கோகுலன்(ஜேர்மனி), Dr. யதர்சினி(யாழ். போதனா வைத்தியசாலை, பல் வைத்திய பிரிவு) ஆகியோரின் அன்பு மைத்துனியும் சிவாஜினி(ஜேர்மனி), அமிர்தினி(ஜேர்மனி) ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 12.05.2025 திங்கட்கிழமை பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

165/1, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

தகவல் : குடும்பத்தினர்
077 033 2647

(4156)

50 ஆண்டுகால சேவையில்
E-Son's
மேன்மை
PARLOUR SERVICE
100 பேர் அமரக்கூடிய விசாலமான மண்டபம்
ஈ – சன்ஸ்
148, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
021 222 2695 / 077 429 0613
(C-2907)

## ஹட்டனில் கார் விபத்து

ஹட்டன்-கொழும்பு பிரதான வீதியின் கரோலினா தோட்டப் பகுதியில் நேற்று (11) காலை குடும்பமொன்று பயணித்த காரொன்று வீதியை விட்டு விலகி 20 அடிப் பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

வெல்லம்பிட்டியவிலிருந்து நுவரெலியாவுக்கு சுற்றுலா சென்று கொண்டிருந்த தந்தை, தாய், மகள் மற்றும் அவரது இரண்டு பிள்ளைகளே இந்த விபத்துக்கு முகங்கொடுத்துள்ளனர்.

காரில் இருந்த மூன்று பேர் காயமடைந்து வட்டவளை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். ஆனால் தெய்வாதீனமாக இரண்டு பிள்ளைகளுக்கும் எவ்விதமான காயங்களும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம-4)

விற்பனைக்குண்டு
அரைக்கும் ஆலைக்குரிய இயந்திரங்கள் விற்பனைக்கு உண்டு. மாலுசந்தி அல்வாய் வீதியில்.
தொடர்புகளுக்கு :
077 604 7786
(1122)

கனடா - வரி இல்லாமல்
விரைவு பொதிகள் சேவை
5-9 Kg 3970/-
11-16 Kg 2800/-
21-30 Kg 2640/-
நிபந்தனைகளுடன்
குறைந்த விலை -நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery
UK 11Kg - 1420/- France 11Kg - 2220/- Germany 11Kg - 2020/-
Swiss 11Kg - 2510/- Australia 11Kg - 1980/- Italy 11Kg - 2250/-
எமது நேரடி கிளைகள்
கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Metro Branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை
V2 TRAVELS 076 822 6241 076 822 6237
(C-2951)

# நீங்கா நினைவலைகள்

4 ஆம் ஆண்டு



தோற்றம்
20.12.2000
மறைவு
08.11.2020

அமரர்
## பாலசுப்பிரமணியம் நிபோஜனா

3 ஆம் ஆண்டு



தோற்றம்
21.09.1998
மறைவு
12.05.2022

அமரர்
## பாலசுப்பிரமணியம் நிபோஜன்

ஆறாத நினைவுகளுடன்.....

காலப் பெருவழியில்
உங்கள் நினைவுகள்
கனத்துக் கிடக்கிறது!
ஆண்டுகள் கடந்து விட்டது-
ஆனாலும் நீங்கள் இருவரும் மீண்டு
வர மாட்டீரோ என்று அடிமனம் தவிக்கிறது....
ஆற்ற முடியாத நோய் என்றார்
நிபோஜனா நீ அவசரமாய்
சென்றுவிட்டாய் ....
தங்கைக்குத் துணை
இல்லை என்று தவித்தானோ?
நிபோஜனும் உன்னோடு
வந்து விட்டான்...
தாங்குமோ நெஞ்சங்கள்?
நீங்கள் விரும்பிக் கட்டிய வீடும்
விளையாடிய முற்றமும்
உற்றார் உறவுகளும்
உங்களுக்காய் காத்திருக்க
பெற்றவரின் வயிற்றில் -ஏன்
பெரும் இடியை இறக்கி விட்டீர்....
கட்டி அழ முடியாத
தூரத்தில் தவிக்கின்ற
அண்ணனுக்கும் நித்தம்
உங்கள் நினைவாலே வாடுகின்ற
பெற்றவர்க்கும் உறவுகட்கும்
பெரும் பேறாய் மீண்டொருகால்
வந்தெங்கள் முற்றத்தில்
விளையாட மாட்டீரோ....?

உங்கள் பிரிவால் துயருறும் குடும்பத்தினர்
கூவில், கீரிமலை.

(1109)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.05.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.